Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

பட்டுப் பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்

டயறும்ஸ்

மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | சுபகிருது சித்திரை 2 ஆம் நாள் துல்கஃதா 9 | (15-4-62) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 63

# திருமலைத் துறைமுகம்

## ஏற்றுமதி செய்யும் முக்கிய இடமாகும்

### அரசாங்க திட்டம்

கொழும்பு, சனி

இலங்கைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் முக்கிய துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இதற்குக் காரணம் சென்ற ஆண்டில் இலங்கையிலிருந்து ஏற்றுமதியான தேயிலையின் 65 சத விகித தொகையையும் திருமலைத் துறைமுகம் தான் ஏற்றுமதி செய்திருக்கிறது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புள்ளிவிபரங்களின்படி சென்ற ஆண்டில் 24 கோடி ரூத்தல் தேயிலை திருமலைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது தெரியவருகின்றது இந்தத்தொகை கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையைவிட கூடியதாகும்.

திருமலைத் துறைமுகத்துக்கு மலைநாட்டுப் பகுதிகளிலிருந்து ரயில்மூலமும், லொறிகள் மூலமும் தேயிலை கொண்டுசெல்லப்படுகிறது. பின்னர் இங்கிருந்து கப்பல்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சென்ற ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு முறை வேலை நிறுத்தங்கள் தடைபெற்றதும் திருமலை துறைமுகம் முக்கியத்துவம் அடையக் காரணமாகவிருந்தது. திருமலைத் துறைமுகத்தைவிடக் காலித்துறைமுகத்திலிருந்தும் தேயிலை இப்போது ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது.

★ ஈழநாடு 15—4—62 ★

## புதிய அவதாரம் !

யாழ்ப்பாணத்திலே முதல் முறையாக சென்ற வெள்ளிக்கிழமையன்று, திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீராம நவமி விழா நடைபெற்றது. விழாவுக்குத் தலைமைவகித்த மாவட்ட நீதிபதி தனபாலசிங்கம் அவர்கள் பேசுகையில், மகாத்மாகாந்தியை புதிய அவதாரமென்று தாம் கருதுவதாகக் கூறினார்.

மகா விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்ததாகப் புராணம். தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும்போது, துஷ்டர்களை அடக்கி, நல்லோர்களைப் பாதுகாப்பதற்குத் தாம் அவதரிப்பதாக பகவான் கிருஷ்ணர் கீதையிலே கூறியதுபோல், இராமன் அதே நோக்கத்துடன் அவதரித்ததாயும், இக்காலத்திலும் மக்கள் உய்வதற்காக மகா விஷ்ணுவே மகாத்மாவாக அவதரித்ததாயும், அப்படி இல்லாவிட்டால், மற்றோர் அவதாரம் சீக்கிரத்தில் வரவேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் கூறினார் நீதிபதியவர்கள். பலர் உள்ளத்திலும் பொதிந்துள்ள கருத்தையே அவர் இப்படி வெளியிட்டார்.

மகாத்மா காட்டிய வழி என்ன? "ஈச்வர அல்லா தேரே நாம் சப்கோ சன்மதி தேபகவான்" என்று புதிய முறையில் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தார். "தெய்வமே! ஈச்வரன், அல்லா என்று உனக்கு எவ்வளவோ பெயர்களுண்டு. எங்களுக்கு நல்ல புத்தியைக் கொடு" என்பதே இதன் கருத்து. பல மதத்தவர்களையும் ஒன்று கூட்டி சர்வ சமய பிரார்த்தனையை நடத்தி எல்லா மதத்தவர்களிடையிலும் ஒற்றுமை ஏற்படுத்த முற்பட்டது பலரும் அறிந்ததே.

மக்களை ஒன்று சேர்த்து ஐக்கியப்படுத்தப்பட வேண்டிய மதங்கள், இன்று உலக மக்களைப் பல கூறுகளாகப் பிரித்து, வேற்றுமைகளுக்கும் கொலைகளுக்கும்கூடக் காரணமாக இருக்கின்றன. இது பெரிய கண்றாவி; விளக்கத் தேவையில்லை. இந்த அவல நிலையை மாற்றி, மத சமரசத்தை ஏற்படுத்தி மக்களை ஒன்றுபடுத்த புது வழி காட்டினார் மகாத்மா. இதற்காகவே அவர் அவதரித்தார் போலும்.

இன்று உலகிலே மதவெறி நீங்கியபாடில்லை. மதத்தின் பெயரால் பல தீங்குகள் செய்யப்படுவதைப் பார்க்கின்றோம். மக்கள் பிரிக்கப்பட்டு வைத்துள்ளனர். இதுகாரணமாவே மதபோதனையை பள்ளிக்கூடங்களில் அளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை சென்றவாரம் டோக்கியோவில் கூடிய உலக கல்வி அமைச்சர்கள் மகாநாடு ஏற்கவில்லை.

இதற்காகப்போலும் மதத்தைப் பகிஷ்கரிப்பதா? அப்படிச் செய்வதில் மக்கள், மானிட வாழ்க்கையின் நோக்கத்தையும், உய்யும் வழியையும் அறியாமல் கோணல் வழிகளில்சென்று அவதிப்பட நேரிடக்கூடும். இதையெல்லாம் அறிந்தே மகாத்மா பல சமய ஒற்றுமையை வற்புறுத்தினார். ஆனல், நமது பள்ளிக்கூடங்களில், மாணவர்களை சமய வாரியாகப் பிரிவினை செய்கின்றோம். இப்படியின்றி உலகெங்கும் எல்லா மாணவர்களுக்கும் எல்லாச் சமய உண்மைகளையும், பொதுத் தன்மையையும் போதிக்க ஒழுங்கு செய்வது, புதிய அவதாரமான மகாத்மாகாட்டிய வழியைப் பின்வற்றுவதாயும், மக்கள் ஒன்றுபட்டு, ஒரு குடும்பமாக நல்வாழ்வு வாழ வகை செய்வதாகவுமிருக்கும்.

## அன்னையர் குலமே சமுதாயத்தின் ஒளிதரும் விளக்கு

### நெல்லியடியில் உடுப்பிட்டி எம்.பி. பேச்சு

உடுப்பிட்டி, சனி

"எந்தநாட்டிலும் அன்னையர் குலமே சமுதாயத்தின் அச்சாணியாக, ஒளிதரு விளக்காக, இதயச் சுடராக இருந்ததும் இருப்பதும் சரித்திரம் சண்டறிந்த உண்மை. சோவியத்நாட்டிலே புரட்சிப்பாதையில் மக்களை யிட்டுச் செல்லவிழைந்த மாக்சிம் கார்க்கி, "அன்னை" என்னும் சிறந்த இலக்கியத்தைப் படைத்தான். அதே போலத் தமிழ்க்கவிஞன் பாரதி, "அன்னமூட்டியதெய்வ மணிக்கையின் ஆணைகாட்டில் அனலை விழுங்குவோம்" என்று பிரதிக்ஞை செய்தான். மாபெரும் வல்லரசான அமெரிக்காவின் அசுர பலத்தை எதிர்த்து வென்ற கியூபாவின் புரட்சித்தலைவன் காஸ்ட்ரோவின் துணையாக சாந்தா மேரியா விளங்குகிறாள்."

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை மாலை உடுப்பிட்டித் தொகுதியின் பல்வேறு நெசவாலைகளிலிருந்தும் நெல்லியடி மார்க்கெட்டில்வருடப்பிறப்பை முன்னிட்டு வருவிக்கப்பட்ட ஆடைகளின் மலிவு விற்பனையை ஆரம்பித்து வைத்த உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:-

"மானங்காக்கும் மறப்பண்பைப் பரம்பரை பரம்பரையாகத் தாங்கிவரும் தமிழ் மாதர் மானத்தைக்காக்கும் ஆடைகள் மூலம் நமது மானத்தை மட்டுமன்றி, பொருளாதாரத்தையும் காக்க முன் வந்திருப்பது பாராட்டப்படக் கூடியதுமட்டுமன்றி ஆதரவு காட்டப்படக் கூடியதுமாகும். வெளிநாட்டுப் படாடோப ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சியடைந்த காலம் மலையேறிவிட்ட தென்பதை உணர்ந்து, தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டியது நமது தலைசிறந்த கடனாகும். இதுவே சாகாவரம் பெற்ற காந்திவழியுமாகும்."

வட்டமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட், திரு. எஸ். முருகப்பா ஆகியோரும் பேசினர்.

## 2-வது தடவையாக தடுப்பு மருந்து

கொழும்பு, சனி.

இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து இரண்டாவது தடவையாக மீண்டும் ஊட்டுவதற்கான நடவடிக்கையை சுகதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். கொழும்பில் லேடி ரிஜ்வே ஆஸ்பத்திரியைத் தவிர முன்னர் ஊட்டமருந்து கொடுக்கப்பட்ட மற்ற நிலையங்களில் வாத நோய்த்தடுப்பு மருந்து இலவசமாக வழங்க சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முதல் முறை இம் மருந்தைப் பெற்றவர்கள் இம் முறையும் இதை அவசியம் பெறவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பதார்த்தமாகவோ அல்லது வில்லை ரூபமாகவோ இந்த மருந்தைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் இந்த இரண்டு மருந்துகளிலும் எதுவித வித்தியாசமுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐந்து நகரங்களில் தமிழரசுக்கட்சியின் கூட்டம்

### எஸ். ஜே வி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அவசரகால நிலைமை அமுலாக்கப்பட்ட ஒருவருடகால எல்லையைக் குறிக்குமுகமாக இலங்கை தமிழரசுக் கட்சி வரும் 17ம் திகதி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து இடங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடத்த தீர்மானித்துள்ளது. இதுசம்பந்தமாக தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

"இலங்கை தமிழரசுக்கட்சி இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து இடங்களிலும் பொதுக்கூட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு வருடகாலம் ஆவது குறித்தே இக்கூட்டங்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்ற வருடம் இத்தினத்தன்றுதான் தமிழ்பேசும் மக்கள் மீது ராணுவ ஆட்சி திணிக்கப்பட்டு தமிழரசுக்கட்சி மீது தடை விதிக்கப்பட்டது.

தமிழ்பேசும் மக்களெல்லோரும் எமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து தமது உரிமைகளைகாக தொடர்ந்து பாடுபடுவார்களென எதிர்பார்க்கிறோம்."

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 2-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (15-4-62) முதல் சித்திரை திங்கள் 8-ம் நாள் சனிக்கிழமை (21-4-62) வரை உள்ள பலன்கள்.

## இன்று

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (15-4-62 ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா மாதம் 9-ம் பிறை.

இன்று இரவு 11-02 வரை ஏகாதசி. பின்னர் துவாதசி. இரவு 9-29 வரை மகம், பின்னர் பூரம். மரணயோகம், ஏகாதசி விரதம், இராகுகாலம் 4-34 முதல் 6-04 வரை. இன்று புதிதாக எதிலும் தலையிடாது பகவத் பிரார்த்தனை செய்க.

திருவாதிரை, புனர் பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று பருட்சிநாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

## மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முன்னைய கஷ்டங்கள் விலகும், கவலைகள் நீங்கும். தொழில் ஊக்கம், பணவரவு, குடும்ப ஒற்றுமை, கடும் உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம், வர்த்தகச் சிறப்பு, தொழில்முறை இலாபம், உத்தியோகப் பொறுப்புக்களதிகரித்தல், மதிப்புயர்ச்சி, கமத்தொழிலில் வீண் அலைச்சலும் பண விரயமும், வித்தியாலாபம், நல்லோர் ஆசி, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, பண வரவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 17, 18, 20, 21 சுபதினங்களாகும்.

★

## இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வீண் அலைச்சல், முக்கிய கருமங்கள் தடைப்படல், புதிய புதிய சிந்தனைகள் தோன்றல், அமைதியீனம், நல்லோர் பகைமை, பணச்செலவு, குடும்பசச்சரவு, வர்த்தகத் துறையில் இலாபம், தொழில்முறை லாபம், உத்தியோகத்தில் அவசரநடத்தை, மேலதிகாரிகள் பகை, ஊழியர் இடர் விளைவித்தல், கமத்தொழில் சீராகநடத்தல், இனசன உதவிகள், வித்தைவிருத்திக்கு பணச்செலவு, சிரமம், பெண்களுக்கு குடும்பச் சீர் சிறப்பு, செல்வாக்கு, இனத்தவர்களுக்கு நன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 21-ந் தேதி சுபதினமாகும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய.)

இவ்விரர்சியாளருக்கு இவ்வாரத்தில் செல்வாக்குவிருத்தி, பணவரவு, நல்லோர் நேசம், தருமவழி செயல்களாற்றல், குடும்பசந்தோஷம், சுபகருமங்கள் நடத்தல், தொழில் வகை வெற்றி, புதியன சித்தியாதல், வர்த்தகத் துறையில் செல்வாக்கு விருத்தி, வருமானமதிகரிப்பு, உத்தியோகத்தருக்கு தொழிலிடத்தில் செல்வாக்கு, மேலதிகாரிகள் உதவி, உயர் பதவி மாற்றம், இடமாற்றம், கமத்தொழிலாளருக்கு பயிர்த் தொழில் சீராக நடத்தல், கால்நடைபெருக்கு, மாணவருக்கு வித்தியாபிவிருத்திச் சிறப்பு, பரீட்சைவெற்றி, பெண்களுக்கு குடும்பச்சீர், தனதானிய விருத்தி, சுபகரும முயற்சி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 15, 16 சுபதினங்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முன்னைய கஷ்டங்கள் நீங்கி, கவலையின்றிதேகாரோக்கியத்துடன் வாழலாம். நல்லோர் நட்பு, தொழில் வெற்றி, வருவாய் அதிகரிப்பு, செல்வாக்குயர்ச்சி, பிரயாண சுகம், குடும்பஒற்றுமை, கல்வி விருத்தி, அரசாங்கம் மூலம் கல்விக்கு பண உதவிகிடைத்தல், தொழில் நலம், உத்தியோகத்தில் நற்பெயர், மேலதிகாரிகள் ஆதரவு, கமத்தொழில் தடை, சொத்துக்கள் பற்றி இனசன தகராறு, வர்த்தக வகையில் ஆதாயம், தொழில் சிறப்பு, பெண்களுக்கு தெய்வ வழிபாடு, நல்லோர் நேசம், குழந்தைகள் - களத்திரநன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 17, 19 சுபதினங்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில் வகைச் சிறப்பு, மனத்தைரியம், உற்சாகம், பணவரவு, எதிரிகள் நண்பராதல், குடும்பஒற்றுமை, சந்ததிகள் கல்வி-சுபகரும முயற்சிகள், தெய்வவழிபாடு, சொத்துச்சேருதல், உத்தியோகத்தர் கடும் உழைப்பு, நற்பெயர், வர்த்தகத் துறையில் நற்பலிதம், பணவரவு, முயற்சி வெற்றி, கமத்தொழில் தடைப்படல், தேகநலக்கேடு, பிரயாண கஷ்டம், கல்வி விருத்தி, வாக்குசாதுரியம், பணஉதவி, பெண்களுக்கு நூதனப்பொருள் சேர்க்கை, விவாக சுபகரும் முயற்சிகள ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 15, 16, 20, 21 சுபதினங்களாகும்.

★

## கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நீசர் தொடர்பு, வண்டி வாகனாதிகள் நட்டம், கஷ்டயிரயாணம், பொருள் நட்டம், கௌரவக் குறைவு, தொழிற்றுமதம், நல்லோர் பகை, பணமுடை, களத்திர வழி உதவி, வர்த்தகத்துறையில் மத்திமபலன், உழைப்புக் சேற்ப வரவு, உத்தியோகத்தருகக்கு உடல்நல குறைவு, பணமுடை, தொழிற்கேடு, கமத்தொழிலாளருக்கு வைத்தியச் செலவு, தொழிற் கணக்கம், கல்விகேள்வித்தடை, பெண்களுக்கு குடும்பநலம், பிதுருவழி உதவி, கணவருக்கு நன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 17, 19 சுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய.)

இவவிராசியாளருக்கு இவ்வாரத்தில் எண்ணியகருமங்கள் வெற்றியாதல், தொழிற் சிறப்பு, பிரயாண கஷ்டம், பணச்செலவு, பணவிவகார வெற்றி, செல்வாக்கு, குடும்ப சுகம், சந்ததிநலம், வர்த்தகத் துறையில் எல்லாவகையிலும் அபிவிருததியும் இலாபமும், உத்தியோகத்திலிருப்பவருக்கு தொழிற்றுமதம், மேலோர் பகை, ஊழியர்எதிர்ப்பு, கல்வி கற்போருக்கு பரீட்சைவெற்றி, வாக்குவன்மை, பயிர்த்தொழிலாளருக்கு கமத்தொழில் சிறப்பாக நடத்தல், தகராறுகள் சாதகமாக முடிதல், பெண்களுக்கு வைத்தியச் செலவு, தேகநலக்குறைவு, குடும்பத்தில் கஷ்டம், ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 16, 20, 21 சுபதினங்களாகும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம்பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத் தளர்ச்சி; மனச்சஞ்சலம், வீண்சந்தேகம், வீண்பிரயாணங்கள், அலைச்சல், பணச்செலவு, தொழில் ஊக்கமின்மை, பெண்வழி உதவி, வியாபாரத்துறையில் வருமானம் சேருதல், செல்வாக்கு உயர்தல், உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளது ஆதரவு, செல்வாக்குயர்வு, புதியமுயற்சி வெற்றி, கமத்தொழிலாளருக்கு பொருள் நட்டம், கால்நடை நட்டம், மாணவருக்கு கல்வித் தளர்ச்சி, பணமுடை, பெண்களுக்கு உடல்நலக்குறைவு, வைத்தியச் செலவு, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 15, 16 18, 19-ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிடிவாதகுணமதிகரிக்கும். முக்கிய முயற்சிகள் தடை, பிரயாண கஷ்டம், பிறருக்கு உதவி, சுபபலன்கள், பண நிலையில் சாதக்குழ்நிலைமை, வர்த்தகத்துறையில் பணமுடை, கடன்படல் ஆகியன காணப்படுவதுடன் தொழில்நிலையில் மந்தமும், உத்தியோகத்தருக்கு அதிக ஆசையால் முயற்சிகளில் அதிருப்தியும் ஏமாற்றமும் வெறுப்பு வளர்தலும், மாணவருக்கு வித்தைச்சிறப்பு, புத்தி சாதுரியம், கமத்தொழிலாளருக்கு கால்நடைகளால் நட்டம், பயிர்த்தொழில் சுணக்கம், பெண்களுக்கு குடும்ப நிம்மதி, புத்திர-களத்திர சுகம், பணவரவு, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 17 18, 20, 21 சுபதினங்களாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சிந்தனைத்தெளிவு, பழைய கணக்கு வழக்குகள் சாதகமாக நிறைவேறுதல், அதிகாரிகள் உதவி, நல்லோர் நட்பு, தொழில் அபிவிருத்தி, பணவரவு, தெய்வ வழிபாடு, குடும்பசுகம், வர்த்தகத்துறையில் நல்லாதாயமும், தொழிற் சிறப்பு, உத்தியோகத்தருக்கு அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படல், தொழிற்கேடு, பணச்செலவு, எதிரிகளால் கஷ்டம், கமத்தொழில் விருத்தி, பயிர்ச் செழிப்பு, மாணவருக்கு வாக்குவன்மை, புத்திசாதுரியம், வித்தைச் சிறப்பு, பெண்களுக்கு மாதாவழி உதவி, குடும்ப சந்தோஷம், சந்ததி—களத்திர நன்மை ஆதியன காணப்படுகிறது. இவர்களுக்கு ஏப்பிரல் 20, 21 சுபதினங்களாகும்

★

## கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பநலக் குறைவு, வைத்தியச்செலவு, போசன கஷ்டம், இனசன இடர், நலக்குறைவு, ஏமாற்றம், பணமுடை, தொழிற் கேடு, வர்த்தகத் துறையில் ஆதாயம், தொழிற் சிறப்பு, மாணவர் கல்வித் தளர்ச்சி, ஊக்கக்குறைவு, மறதி, கமத்தொழிலாளருக்கு குடும்ப விரோதம் தொழில்தடை, தாயாதிகள் சச்சரவு, கால்நடை நட்டம், உத்தியோகத்தருக்கு தொழிற்தாபனத்தில் கஷ்டங்கள், எதிர்ப்புகள் குறையும், உற்சாகம், அதிகாரிகள் பாராட்டு, பெண்களுக்கு நல்லாரோக்கியம், இனசன உதவி, பணவரவு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்பிரல் 15, 16 சுபதினங்களாகும்.

★

## மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்ரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்ப நிம்மதி, கடும் உழைப்பு உழைப்புக்கேற்ற பலன், பணநிலையில் நெருக்கடி, பிரயாணக் கஷ்டம், வண்டிவாகனதி பொருள் நஷ்டம், மாணவருக்கு வித்தியாபிவிருத்திச் சிறப்பு, உத்தியோகத்தருக்கு கடும்உழைப்பு, பிடிவாதத்தால் அதிகாரிகள் பகை, ஊழியர் இடர்தரல், கமத்தொழிலாளருக்கு கடும் உழைப்பு, வேலையில் தளர்ச்சி, பெண்களுக்கு குடும்ப நலம், பொருட் சிறப்பு, களத்திர சுகம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்பிரல் 17, 19 சுபதினங்களாகும்.

# விண்வெளிப் பயணம்

## சந்திரனில் இறங்கத் திட்டம்

அமெரிக்கா நான்கு விண்வெளிப் பயணங்களுக்கு இவ்வாண்டு ஏற்பாடு செய்து வருகிறது. முதலில் ஜான் கிளன் போய் வந்தது போன்று உலகத்தை மூன்று முறை சுற்றி இறங்கும் விண்வெளிப் பயணங்கள். அதன் பின், அக்டோபர் மாதம், உலகத்தைப் பதினெட்டுச் சுற்றுச் சுற்றி இறங்கும் நீடித்த விண்வெளிப் பயணம்.

ஜான் கிளன் சென்ற விண்வெளிக் கப்பலுக்கும் இந்த நான்கு புதிய விண்வெளிப் பயணங்களுக்கான விண்வெளிக் கப்பல்களுக்கும் வேறுபாடு இருக்காது. முன் போலவே அட்லாஸ் ஏவுகணை அவற்றை விண்வெளியில் செலுத்தும்.

மே மாதக் கடைசியில் அல்லது ஜூன் மாதத் தொடக்கத்தில் அடுத்த விண்வெளிக் கப்பல் செலுத்தப்படும். அதை டொனல்டு கே. ஸ்லேட்டன் என்னும் 37 வயது விண்வெளி விமானி இயக்கிச் செல்வார்.

### சிலமாறுதல்

ஜான் கிளன் சென்ற விண்வெளிக் கப்பல் ஒரு டன் எடையுள்ளது. அடுத்த நான்கு விண்வெளிக் கப்பல்களும் அந்த எடையே இருக்கும். ஆனல் 18 சுற்றுச் சுற்றி இறங்கப்போகும் விண்வெளிக் கப்பலில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கும். மின்சார பாட்டரிகள், பிராணவாயு முதலியவை யெல்லாம் ஒரு முழு நாள்பயணத்துக்கு வரும்படி அதிகமாக வைக்கப்பட்டிருக்கும். கிளன் பயணத்துக்கு ஆன நேரம் 4 மணி 56 நிமிஷமே. ஆனல் 18 சுற்றுப் பயணத்துககு ஒரு பகலும் ஓர் இரவும் ஆக இருபத்து நான்கு மணி நேரமாகும.

### நான்கு லட்சம் கருவிகள்

விண்வெளிக் கப்பல் ஒன்றைச் செலுத்துவதற்கு முன் ஏராளமான கருவிகளைச் சோதித்துச் சரிபார்க்க வேண்டியிருக்கிறது. விண்வெளிக் கப்பலிலும் அதைச் செலுத்தும் அட்லாஸ் ஏவுகணையிலும் 4 லட்சம் கருவிகள் உள்ளன. இவ்வளவையும் சரிபார்த்துத் தெரிந்த பிறகே, விண்வெளிக் கப்பலைச் செலுத்த முடியும். அது மட்டுமல்ல, விண்வெளி விமானி திரும்பி வந்து இறங்கும் இடத்தில் கடலில் 15,000 பேர்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். மேலும், உலகம் நெடுகிலுமாக 18 இடங்களில் செயற்கைக் கோள் நிலையேறி நிலையங்கள் உள்ளன. அவற்ருேடும் செய்தித் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இவ்வளவும் சரியாக இருந்தாலும், வானிலை சரியாக இருக்கவேண்டும். இவற்றில் ஒன்று சரியாக இல்லையென்ருலும், விண்வெளிப் பயணத்தைப் பின்போட வேண்டியதாகும். விஞ்ஞானிகளும், தொழிலாளர்களும், கடற்படையினரும் பிறருமாக 30,000 பேர் ஒத்துழைத்தால் தான், விண்வெளிப் பயணம் ஒன்று நடைபெற முடியும்.

விண்வெளிக் கப்பலில் உள்ள தானே இயங்கும் சில ஏற்பாடுகளை நீக்கி விடலாம் என்று ஜான் கிளன் சொல்லியிருக்கிறர். ஆனல் அதிகாரிகள் அவற்றை நீக்கப் போவதில்லை.

விண்வெளிக் கப்பல் ஏற்கனவே உருவாக்கப்பட்டு விட்டது. ஆதலால் அதில் பெரிய மாறுதல் எதுவும் செய்ய முடியாது. மேலும், இத்தகைய கப்பல்களில்

(12ம் பக்கம் பார்க்க)

For Your Textile Requirements

Colombo Textiles

Importers, Wholesalers & Retailers of Textiles

192, K. K. S. Road, JAFFNA.

கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

இறக்குமதியாளர், மொத்த-சில்லறை பிடவை வர்த்தகர்.

192, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான பட்டு பருத்தி நூல் கைத்தறிப் பிடவைகளுக்கு எங்களிடம் வாருங்கள்!

# நல்லதொரு சமுதாயம் உருவாக உலகெலாம் தமிழ் பரவவேண்டும்

— ஆ. தேவராசன் —

**தமிழ் ஏனைய நாடுகளில் பரவச்செய்ய அதன் இலக்கியங்களைப் பிறமொழிகளிற் பெயர்த்துக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் இலக்கியங்களைத் தமது சொந்த மொழியில் பயிலும் பிறநாட்டார் தமிழரிடத்தில் அன்பு கொள்வர்.**

வானம்அளந்து அனைத்தும் அளந்த வண்ணத்தமிழ் மொழி வாழவேண்டும் என்பது ஒவ்வொரு தமிழனின் ஆசையாக இருக்கிறது. இலக்கிய வளம் மிக்க இம்மொழியை வையகம் தெரிந்திருக்க வேண்டும்.

நல்லதொரு உலக சமுதாயம் உருவாக, உயர்ந்த இலட்சியப் பாதையில் முன்னேறி மேம்பட உலக மக்களிடையே தமிழ் இலக்கியமும், தமிழ் பண்பாடும் கலந்து உறைய வேண்டியது மிக அவசியம். இதற்குத் தமிழ் தரணி எல்லாம் பரவவேண்டும். தமிழ் ஏனைய நாடுகளின் மொழியாக அமையும் என்று இன்றைய உலக சமுதாய அமைப்பில் சொல்லிக்கொள்ள முடியாது. பிறநாடுகளை அடிமைப்படுத்தி அந்த நாடுகளில் தமிழ்நாடு ஆட்சி செலுத்தும் நிலை ஏற்பட்டால் ஒழிய, ஏனைய நாடுகளில் தமிழ் மொழியைத் திணிக்கவே முடியாது. இன்றைய உலக சமுதாயத்தில் இச்செயலுக்கு இடமில்லை. எனவே, தமிழ் ஏனைய நாடுகளில் பரவச்செய்ய அதன் இலக்கியங்களைப் பிறமொழிகளில் பெயர்த்துக் கொடுக்க வேண்டும்; அப்படிச் செய்தால் தமிழ் இலக்கியங்களை தமது சொந்த மொழிகளில் பயிலும் பிறநாட்டார் அவற்றின் உயர்வை உணர்வதுடன் நில்லாமல் அந்த இலக்கியம் உருவாகிய தமிழ் மொழியிடத்திலும், அந்த இலக்கியத்தை உருவாக்கிய தமிழ் மக்களிடத்திலும் மதிப்பும் அன்பும் காட்டுவர். இந்த வழியாகவே இன்றைய சமுதாயத்தில் தமிழ்மொழியைத் தரணி எல்லாம் பரப்ப முடியும். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மொழிபெயர்ப்புக்கும் பிறநாட்டுத் தொடர்புக்கும் ஆங்கிலத்தைப்போல துணையான மொழி வேறு இல்லை. வசதியும் சூழ்நிலையும் ஏற்பட்டால் ஏனைய மொழிகளிலும் மொழிபெயர்ப்புகளை அமைத்துக் கொள்ளலாம்; மற்றும்படி ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புகள் ஏராளம் தோன்றவேண்டும். தோற்றுவிக்க வேண்டும்; ஆங்கிலத்தை நன்கு கையாளக்கூடியவர்கள்பலர் தமிழ் நாட்டில் இன்று இருப்பதால் இன்று இது இலகுவானதும், வசதியானதும்கூட. இந்த நல்ல தருணத்தை நாம் நழுவ விடக் கூடாது.

## மொழிபெயர்ப்புகள்

தமிழ் இலக்கியங்கள் இதுவரை ஆங்கில மொழியில் பெயர்க்கப்படவில்லை என்று சொல்வதற்கில்லை. சில மொழிபெயர்ப்புகள் தோன்றித்தான் இருக்கின்றன. ஆனால் தோன்றியவை போதாது; தோன்றிய சில மொழி பெயர்ப்புகளுக்குக் கிடைத்துள்ள மிக உயர்ந்த மதிப்பே மேலும் மொழி பெயர்ப்புகள் வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. சிலப்பதிகாரம், சிவஞான போதம், திருக்குறள், திருவாசகம் போன்ற சிறந்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளினால்தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் மொழிக்கும் கிடைத்த மதிப்பு மிக உயர்ந்தது. ஆனால் இந்த மொழி பெயர்ப்புகள் பலர் மத்தியிலே பயிலவில்லை— ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்குள்ளேயே பயிலமுடிந்தது. அந்த ஒருசில வட்டாரத்திற்குள் பயில்வதற்கும் மொழி பெயர்ப்பே துணையாக இருந்திருக்கிறது. மொழிபெயர்ப்பின் அவசியம்பற்றி ஒருசிலர் குறிப்பிட்டவற்றை இங்கு கவனிப்பது நல்லது.

1930ம் ஆண்டில் எப். ஜே. ரிச்சட்ஸ் என்பவர் சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதருக்கு எழுதுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலப் பதிப்புகளுக்காக (தமிழ் இலக்கியம்) வற்புறுத்த நான் தயங்கமாட்டேன். ஏனென்றால் தமிழர் அல்லாதவர்களுக்கு தமிழ் ஒரு மறைபொருளாக இருக்கிறது. அத்துடன் இந்தியப் பண்பாட்டிற்கு தமிழ் செய்திருக்கும் தொண்டை இந்தியாவின் ஏனைய பகுதிகள் உணர்ந்துகொள்ளாதது பரிதாபமாகும். பெரும்பாலான மக்கள் பயின்று இதைஅறிந்துகொள்வதற்கு பலருக்கும் கிட்டக்கூடியதாக இவற்றை வெளியிடவேண்டும். இந்தியாவிலும் பிற இடங்களிலும் இத்தகைய பிரசித்தி தேடிக்கொள்ள ஆங்கிலமே கைவந்த சாதனமாகும்."

திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஏற்கனவே "தமிழ் இலக்கியத்திலும் தமிழ் வரலாற்றிலும் ஆராய்ச்சிகள்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிட்ட நூலைப் படித்து அதில் உற்சாகமடைந்த பின்னர்தான் திரு. எப். ஜே. ரிச்சட்ஸ் இப்படி எழுதினார். தமிழ் இலக்கியங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும், தமிழ் இலக்கியங்களின் ஆங்கில ஆராய்ச்சி உரைகளையும் வெளியிடவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார். இவர் இந்திய சிவில் சேவையில் இருந்த ஒரு தமிழர் அல்லாதவர்.

பொன் (Bonn) பல்கலைக்கழகத்திற்குப்பேராசிரியர் எச். ஜெகோபி சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வரலாற்றுப் பேராசிரியர் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கு 1926ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எழுதுகையில் குறிப்பிட்டதாவது:—

"மணிமேகலையை குறிப்பாக இந்திய தத்துவம் பற்றியும் பௌத்தம் பற்றியும் உள்ள காதைகளை உண்மையான மொழிபெயர்ப்பால் பல அறிஞர்களுக்கு கிட்டும்படி செய்ததற்காக இந்திய பண்பாட்டிலும், தென் இந்திய வரலாற்றிலும் ஈடுபாடுகொண்ட அனைவரின் நன்றிக்கும் அபிமானத்திற்கும் நீங்கள் உரிமையாளர் என்பது என் மனமார்ந்த கருத்து."

திரு. கிருஷ்ணசாமி ஐயங்கார் மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்த மொழிபெயர்ப்பினால் பயன் அடைந்தவர்களில் ஒருவர் பேராசிரியர் ஜெகோபி. அவர் வெளியிட்டிருக்கும் கருத்திலும் மொழிபெயர்ப்பினால் ஏற்படக்கூடிய நன்மை புலனாகிறது.

## 30 ஆண்டுகளுக்குமுன்

திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த சிலப்பதிகாரத்திற்கு முகவுரை எழுதுகையில் பாரசீகப் பல்கலைக் கழகத்து முன்னை நாள் பேராசிரியர் ஜூல்ஸ் புளொக் 1939ம் ஆண்டில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் இலக்கியங்களைக் குறிப்பாக பழையவற்றை அணுகக்கூடியவர்களும், படித்து மகிழவோ அல்லது பயன்படுத்திக்கொள்ளவோ கூடியவர்களும் எத்தனைபேர் இருக்கிறார்கள்? தமிழ் நாட்டில் பிறந்தவர்களிலேயே மிகச் சிலரேதான் அப்படிச் செய்யக்கூடியவர்கள் என்பது பொதுவாக எல்லோரும் அறிந்ததே. தமது நாட்டில் சிறப்பான கீர்த்தியும் உற்சாகமும்கொண்ட அந்தப் படைப்புகளை (தமிழ் இலக்கியங்களை) தமது சகாக்கள் உணர்ந்தறிய உதவுதலும், வெளிநாட்டாருக்கு உண்மையான விளக்கம் கொடுத்தலும் அந்தச் சிலரின் மீதுள்ள பொறுப்பாகும்..... சமஸ்கிருதத்தில் இருந்து ஐரோப்பிய மொழிகளிலும், பிரதானமாக ஆங்கிலத்திலும் ஏற்பட்ட மொழி பெயர்ப்புகளினால் சமஸ்கிருத ஆராய்ச்சியில் எவ்வளவு முன்னேற்றங் காணப்பட்டது என்பதைப்பற்றி நான் நினைவூட்டிச் சொல்லவேண்டுமா! மொழி பெயர்ப்புகள் நிறைந்திருந்த காலங்கள்தான் இந்திய வரலாற்றில் இணைப்பும் முன்னேற்றமும் இருந்த காலங்கள் என்பதை இந்தியாவின் பண்பாட்டு ஐக்கியத்தை மேலோங்கச் செய்வதில் கவனம் கொண்டவர்களுக்கு நினைவூட்டிச் சொல்லவேண்டுமா நான்? இதுவே என் கோரிக்கை......" மொழிபெயர்ப்புகளின் அவசியத்தை மொழிபெயர்ப்புகளினால் பயன் அடைந்தவர்கள் சொல்வதில் இருந்தே துல்லியமாக அறிந்து கொள்வதோடு உணர்ந்து கொள்ளவும்முடிகிறது. 1926ம் ஆண்டில் பொன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜகோபி வற்புறுத்தியதை 1930-ம் ஆண்டில் திரு. எப். ஜே. ரிச்சட்ஸ் வற்புறுத்தினார். அவர்கள் சொன்னதையே அழுத்தமாக 1939ம் ஆண்டில் பாரசீகப் பேராசிரியர் ஜூல்ஸ் புளொக் வற்புறுத்தினார். இவை ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்குமுன்பு இருந்த நிலை.

## இன்றைய நிலை

இதே கண்ணோட்டத்துடன் இன்றைய நிலையைப் பார்ப்போம். இன்றும் நிலையில் மாற்றமில்லை. இதையும் சுட்டிக்காட்டியிருப்பவர் ஒரு பிறநாட்டு நற் தமிழ் அறிஞர். செக்கோஸ்லவேக்கியாநாட்டில்அல்லும் பகலும் தமிழுக்காகஉழைத்துவரும் டாக்டர் கமில் ஸ்வலெபில் மொழிபெயர்ப்பின் அவசியத்தையும் வேறு சில தேவைகளையும்வற்புறுத்துகின்றார். 1956ம்ஆண்டு அக்டோபர் மாதம் அவர் குறிப்பிட்டிருப்பதாவது: "தமிழ்ப் பண்பாடு உலக நாகரிகத்தின் அழிவில்லாப் பெரும் கருவூலங்களில் ஒன்று என்பதைப்பற்றி ஒருவித சந்தேகமுமில்லை. பரந்த நோக்கும் ஆழ்ந்த கல்வியும் உடையவர்கள் என்று தம்மைச் கூறிக்கொள்ளும் இந்தியர்களும் ஐரோப்பியர்களும் கூட இதை உணரவில்லை என்பதை நான் எப்படியும் என் சொந்த அனுபவத்தில் இருந்து சொல்லிக்கொள்ள முடியும். உலக நாகரிகத்திற்குத் தமிழ்ப் பண்பாடு அளித்துள்ள மிக முக்கியமான பங்குகளைப்பற்றி உலகத்தின் பண்புள்ள மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டியது தமிழர்களுடைய கடமையோடு, தமிழ்ப் பண்பாட்டை வியாக்கியானம் செய்யும் அனுதாபிகளுடைய கடமையுமாகும்." இப்படிச் சொல்லிய இவர் ஏழு முக்கியமான நூல்களைக் குறிப்பிட்டிருக்கிறார். எட்டுத் தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மாணிக்கவாசகர் பாடல்கள், சம்பந்தர் பாடல்கள், நம்மாழ்வார் பாடல்கள், ஆண்டாள் பாடல்கள், சைவ சித்தாந்த நூல்கள் போன்றவற்றின் மொழிபெயர்ப்புகளும், சோழர் காலத்துச் சிலைகள், திராவிடச் சிற்பங்கள் பற்றிய நூல்களும் வெளிவரவேண்டியது மிகஅவசியம் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அவையின்றி நிச்சயமாக இந்த உலகத்திற்கு பொலிவுக் குறையும் மகிழ்ச்சிக்குறைவும் ஏற்படுத்திவிடக்கூடிய இந்த ஏழு வெவ்வேறு படைப்புகளும், தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைவரின் கவனத்தையும் உடனடியாக ஈர்க்கவேண்டும். அபாரமான தமிழ் ஆக்கப் படைப்புத் திறமைகளின் இந்த உயர்வுகளை இந்த முழு உலகும் அறியச் செய்வதற்கு (நன்றாகவும் நுணுக்கமாகவும் அறியச் செய்வதற்கு) அவர்கள் எல்லோரும் தமது நேரத்தையும் முயற்சியையும் திறைகொடுக்க வேண்டும்" என்றும் அவர் தொடர்ந்து மிகவும் வற்புறுத்தியிருக்கிறார். 1956ம் ஆண்டில் அவர் இப்படிச் சொன்னார். ஐந்து ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. நிலைமையில் மாற்றமே இல்லை.

## வெறும் பேச்சு

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்

(10ம் பக்கம் பார்க்க)

## அமிழ்தத் தமிழ்

— 'பரமஹம்சதாசன்' —

அன்புத் தமிழைப் பரப்புவோம்; - அதன்
ஆர்வத்தை யெங்கும் நிரப்புவோம் - கொடுந்
துன்ப விருளைத் துரத்துவோம், அருட்
சோதித் தமிழ்ப்பொற் கரத்தினால்!

அமிழ்தத் தமிழைப் பருகுவோம்; - இற
வாத நிலையைப் பெறுகுவோம் !
இமையவ ரும்கண்டு போற்றவே, - உயர்
இன்பத் தமிழிசை மீட்டுவோம்!

பக்தித் தமிழ்க்கவிச் சோலையில் - தெய்வ
பரவசத் தேனுண்டு வாழுவோம் !
சக்தித் தமிழ்க்கனற் பேச்சினால், - செழுந்
தங்கத் தமிழ்க்கதிர் பாய்ச்சுவோம்!

வீரத் தமிழ்க்கனல் மூட்டுவோம்; - எங்கும்
வெற்றித் தமிழ்க்கொடி நாட்டுவோம்;
கோரப் பகைகளைச் சாடுவோம், - உயர்
கொற்றத் தமிழ்ப்புகழ் பாடுவோம்!

சங்கத் தமிழை முழக்குவோம்; - பழந்
தண்டமிழ்ப் பண்பு தழைக்கவே!
சிங்கத் தமிழர் எழுகவே, - தூய
செந்தமிழ்க் கர்ஜனை செய்குவோம்!

தாழ்வுயர் வுமனப் பேதமும், - கொடுஞ்
சாதி மதத்திமிர் வாதமும், - உடன்
வீழ்ந்தொழி யத்தமிழ் வீறுடன் - புது
வேகத் துடனேமுன் னேறுவோம்!

# நினைவு மின்னல்

— செ. கதிர்காமநாதன் —

மின்னல்கீற்று கரும் இருளைக் கிழிக்கிறது.
கடகடாச் சத்தத்துடன் மலையடிவாரம் அதிர பொல்காவலையில் வந்து ரயில் நிற்கிறது.
எவர் எவரோ எல்லாம் ஏறுகின்றார்கள்.

சிறுகதை

"தேவி...."

அவளை யாரோ" அழைப்பது போன்ற உணர்வு... ஆனால் அவளை யாருமே அழைக்கவில்லை ... அது அவளுக்குத் தெரிகிறது ... தெரிந்தும் அப்படியொரு மனப்பிரேமை ......

அந்தக்குரல்—

"தேவி ..."

அது யாருடைய குரல் என்பது அவளுக்கு நல்லாகத் தெரியும் ... அந்தக் குரலைக் கேட்கையில் நெஞ்சில் இனந்தெரியாத கிளர்ச்சி ... ஒருவித துடிப்பு ... குதூகலம் ......

"கனகு ..."

உதடுகள் அசைகின்றன ... கைவிரல்கள்சரக்சரக்கென்று சஞ்சிகைகளின் பக்கங்களைத் தட்டிக்கொண்டே செல்கின்றது ....

வதனத்தில் சிரிப்பின் துள்ளல் .. அது மனம் நிறைந்த மகிழ்ச்சியின் பிரதிபலிப்ப .....

தேவியின் கரங்கள் வெறுப்போடு சஞ்சிகையைத் தள்ளுகின்றது ... தனது நீண்ட கருங்கூந்தலைப் பிரித்துப் பின்னிக் குழும்பு செய்வதில் நேரம் கரைகின்றது ...

"கனகு —"

தேவிக்கு ஏன் இந்தப் பெயரில் இவ்வளவு பிரேமை... ? அது அவளுக்குத் தெரிந்தது போலவும் தோன்றுகின்றது... அதைத் தெரியவைப்பது போல கண்ணெதிரில் இருக்கும் அந்தச் சுவரில் —

"கனகு - தேவி"

யாரோ சினேகிதிகள் பென்சிலால் அழகாக எழுதிக் கேலி செய்திருக்கின்றார்கள்.... அவர்களை ஏசவேண்டும் போன்ற மனத்துடிப்பு .... ஆனால் ஏசாமல் எழுதியதை மனதுக்குள் விரும்பிரசிக்கும் மனோநிலை ....

இந்தப் பொய்க்கோபத்திற்கும், மனதார ரசிக்கும் விருப்பத்திற்கும் ஊடாக இழையோடும் அந்த மகிழ்ச்சி —

தேவியினை அறியாமலே அவள் கண்கள் எதிரே இருக்கும் நிலைக்கண்ணாடியில் சென்று நிலைகுத்துகிறது...

அந்த நிலைக்கண்ணாடியில் —

அவள் உருவம் ......

அவள் —?

இந்த அழகுதானே கனகை மயக்கி —?

அவளுக்கு அவளையறியாமலே பெருமிதம் ... ஒருஆணைத் தன்னால் மயக்க முடியுமென்றால் ....!

மனம் மகிழ்ச்சியால் அலைகடலாகிறது....

ஏன் அவள் மட்டும் —?

அலைஅலையாக நெளியும் மயிர்ச்சுருள்கள் ... பொதுநிற மானாலும் கவர்ச்சிகரமான அழகுத் தோற்றம் ... குறுகுறு வென்று சுழன்று ஒளிரும்கண்கள் ... வாலிபக்குறும்பில் தன்னிச்சையாக லயிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையிற் கூடத் தன்னடக்கமான சுபாவம் . . . . .

மொத்தத்தில் கனகு —

கனகுவின் வழியே தனி!

"களாக்ஸ் -- தேவி . . . ."

கீச்சுமூச்சென்று பல்வேறு குரல்கள் கேலியாக எழுந்து சிரிப்பாகமாறி --

சந்தைக்கடை கூடுகிறது ... தேவியால் தாங்கமுடியவில்லை . . .

நித்தம் நித்தம் நிகழும் நிகழ்ச்சி நிரல் . . . .

—நீலவண்ணத்துகில் தோளினின்றும் நழுவிக்கீழ் நோக்கிச் சரிகிறது . . . கண்ணாடியில் அந்த அழகு அவள் கண்களுக்குத் துல்லியமாகத் தெரிகிறது . . .

கரங்கள் அதைச் சரிசெய்யவே —

"சர் . . . க் . . . "

வெடுக்கென்று கையைஎடுத்துத் துடிக்துப் போகின்றாள் தேவி.

அவள் முகம் குப்பென்று சிவக்கிறது . . .

அவள் பெருவிரலில் —

ஒரு மோதிரம் !

மோதிரமா ? – அது அவள் வாழ்க்கையையே நிர்ணயித்து விட்ட அடையாளம் . . . .

நினைவுத்திரையில் - நெஞ்சத்திரையில் தோன்றும் கனகிற்குப் பதிலாக --

மோதிரத்தின் ஒளியில் ஒளிரும் அந்த எழுத்துக்கள் அவள் நெஞ்சில் சம்மட்டியாக ஓங்கி —

ஐயையோ !

பெண்மனமே இப்படிப்பட்டது தானா ?

அவள் பல்கலைக்கழகத்துக்குள் காலடி எடுத்துவைக்கு முன்னரேயே அவளுக்கும் அவள் அத்தானுக்கும் பதிவுத் திருமணம் ஆகிவிட்டது. அவளுடைய நெஞ்சம் முழுக்க முழுக்க உலகத்தை அறியமுடியாத நிலையில், விருப்புவெறுப்பற்று பெற்றோர் மனப்போக்கிற்கு இயைந்து செல்லக்கூடிய நிலையில் அவள் கரங்கள் தேவி என்ற கையெழுத்தைப் போடத் தயங்கவில்லை . . .

'அத்தான் —' !

'ஒரு கிளறிக்கல்' . . .

'கனகு' . . . . .

'பட்டதாரி' . . . !

"கனகு . . . கனகு . . . ."

கனகுவை அவள் ஏமாற்றுகிறாளா ? இல்லை -- தன்னைத் தானே ஏமாற்றுகிறாள் . . . ஏமாற்ற முயற்சிக்கிறாள் . . . முடியவில்லை . .. முடிவது போல் இருந்தாலும் நித்யம் அவனோடு சல்லாபிக்கும் சூழ்நிலையில் --

பெண்மனம் இருக்கயில்லை! பேதலிக்கிறது!

தேவியின் உள்ளத்தில் ஏதோ குடைகிறது . . . அவள் எதையுமே செய்ய முடியாத நிலை . . . . அவள் வாழ்வு நிர்ணயிக்கப்பட்டுவிட்டதே . . . !

தேவி மனம் புழுங்குகிறாள் - அந்த மனப் புழுக்கத்தில் அவளுடைய துடிப்பு ஒடுங்கி - நீண்ட பெருமூச்சு . . . !

இப்பொழுதெல்லாம் அவள் கனகுவைக் கண்டால் தூரஓட முயலுகின்றாள் ... தனது விஷப் பரீட்சையினை எண்ணிஎண்ணி அவள் உள்ளம் --

"சே! ஏன் இந்தப் விவாகப் பதிவை விட்டார் செய்துவைத்தார்கள் . . . ?"

வேதனையோடு எண்ணம் வெடிக்கிறது . . . விம்முகிறது . . . . வழியற்றுச் சமைந்து குமைகிறது . . .

"கனகு . . . ."

திக்பிரமையோடு திணறிப் போய் உட்கார்ந்திருக்கும் அவன் கையில் மதுப்புட்டி . . . கிளாஸ் . . . தன்னையே உணராத பிதற்றல் . . . . . ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு— !

ஏக்கத்தின் எல்லை . . . !

இதயமலர்மொட்டவிழ்த்துப் பூத்துப் புதுமணம் பரப்பிய வேளையில் —

விவாகப்பதிவு என்ற சோனகத்தின் உக்கிரமான வீச்சு — சுழன்று சுழன்று வீசி இதயச் செடி நளர்ந்து பெயர்ந்து சிதைந்து வெறும் சூனியமாகி- கிளாஸில் மெல்லிய மஞ்சள் நிறமான அக்கமது நுரைத்து நிரம்பிவழிகின்றது .....

அவன் மனத்திலே செறிந்து, செழுமையாகிப் புதுக்கிளர்ச்சிகளை உண்டுபண்ணிய அவள் ஒவ்வொரு 'மிடறு' மதுவிலும் செறிந்து, செழுமையான எண்ணங்களை இப்பொழுது கருக்கிக் கொண்டிருந்தாள் . . . . !

வெறுப்பால் மதுவிலே சரண்புகுந்தும் குடிபோதையில் நெஞ்சத்து நினைவுகளிலே திணறி .....

அவனைக்கனிவோடு பொருள் புதையப் பார்த்த கண்கள் இன்றுமிரண்டு, ஏக்கத்தோடு தனது குற்றத்திற்காகப் பயத்தோடு மன்றாடுவதை அவன் அவதானிக்கவில்லை ... இப்போ புதிய திருப்பத்தில் அவன் சென்றுகொண்டிருக்கிறான் ... மதுகூட வெறுத்து—

"கடந்த காலத்துத்துன்பக் கனவுகள் நெஞ்சில் மக்கி, நிகழ்காலக் கனவுகள் அந்த எழுவில் தழைத்துச்செழிக்கவேண்டும் —"!

நெஞ்சத்தில் உறுதி ... வைராக்கியம் .... !

காலம் எதற்கும் காத்து நிற்காமல் உலகத்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளையெல்லாம் முடிமறைத்து இறந்தகாலம் என்ற முத்திரையிற்குள் அவற்றைப் பொறித்துக் கொண்டு செல்கையில் --

அவன் அவளைவிட்டுப்போய் விட்டான் ... !

அவன் முந்திப் போகவேண்டியவன்!

பழைய நினைவுகளை ஊட்ட அவன் அவளுக்குப் பக்கத்தில் இல்லை!

அவள் அவனுக்குப் பக்கத்தில் இல்லை . . . . !

என்றாலும் —

இடையிடையே நினைவு மின்னல்!

* * *

மின்னல் கீற்று கரும் இருளைக் கிழிக்கிறது.

கட கடாச்சத்தத்துடன் மலையடிவாரம் அதிர பொல்காவலையில் வந்து ரயில் நிற்கிறது . . .

எவர் எவரோ எல்லாம் ஏறுகின்றார்கள்.

ரயிலுக்குள் இருக்கும் கனகுவின் மனதிலும் பழைய நினைவு மின்னல் . . . !

முன்பு —

முட்டைமுடிச்சுகளோடு நண்பர் குழாமுடன் விழுந்தடித்து யாழ்ப்பாணத்திற்கு ஏறிச்செல்லும் காட்சிகள் தோன்றித் தேய்ந்து மறைகின்றன . . .

அந்த 'வெயிட்டிங் றூம்' அருகில் . . .

பழைய நினைவுகளில்இருந்து இதயத்தினில் தோன்றிமறைகின்றது ஒரு கிளை மின்னல் ...

அதோ தேவி நிற்கிறாள் . . .

"தேவி . . ."

அது அவனுடைய அழைப்பு- அவன் கையினில் இருந்த சொக்கிலெட் ஒன்று அவள் கரங்களில் தஞ்சமடைகின்றது . . .

இருவர் கண்களும் ஒன்றையொன்று விழுங்குகின்றன . . . மெல்லிய புன்முறுவல் . . .

"சே! இதென்ன! பழையதைப் பற்றியெல்லாம் . . . ? இந்த இடங்களைக் காணும் போதெல்லாம் பழைய நினைவுகள் வந்து . . . வந்து . . . " வெறுப்போடு யன்னலுக்கு வெளியே சென்று அலைந்து கொண்டிருந்த கண்களைத் திருப்புகிறான் . . .

அதிர்ச்சி . . . . !

சோகப் பதுமையாக, எல்லையிலாத சோகத்துடன் தளர்நடை நடந்து மெல்ல இடம் தேடி வந்துகொண்டிருக்கும் அவள் -- "தேவி . . . !"

அவளுடையகண்கள் சிவந்து வீங்கி இருக்கின்றன . . . ஏதோ கடமைக்காக உடுத்தவளைப் போல ஏதோ ஒரு சாறியை அள்ளி உடுத்தியிருந்தாள் . . . நீண்ட கருங்கூந்தல் வழக்கம் போல அழகாகப் பின்னியிருக்கவில்லை . . . குலைந்து சண்டித்தனம் செய்துகொண்டு அங்கும் இங்குமாகப் புரளுகிறது...

அவள் கண்களும் 'வீட்டை நோக்கித் திரும்புகின்றன...

கவலை துள்ளும் கண்கள் நிலைகுத்தி நிற்கிறது!

"கனகு—"மெல்லமாக ஈனஸ்வரத்தில் எழுந்து தேயும் அவள் குரல் அவனுக்குக் கேட்கிறது... கேளாதவன் போல இருளை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்...

இருள் —!

நிசப்தம்......!

அவள் அவனைப்பார்க்கிறாள். மனதிலே பழைய நினைவு மின்னல்!

"கனகு ... கனகு......" கீச்சுக் குரல்கள் கேலிக்காக எழுந்து அவளை—

தேவி திணறுகிறாள்......

அந்தத் திணறலிலும் நினைவுப் பாதையிலே இன்னொரு திருப்பம்......அவளுக்கு—

விவாகப் பதிவு என்ற விலங்கு......

தேவியின் கண்கள் பனிக்கின்றன...தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்முகிறாள்......

அவனைத் தவிர அங்கே அவள் இருக்குமிடத்தில் எவரும் இல்லை......!

பொறுமையின் எல்லையில் அவள் வாய்விட்டு அழுகிறாள்... அவள் நெஞ்சுக்குள்ளே பொறுமையாக இருந்து புகைந்த துன்பம், எவரையுமே இலட்சியம் செய்யாமல், எங்கே இருக்கிறோம் என்பதை உணராமல், அழுகையாக விம்மி வெடிக்கிறது......

"தேவி ஏன் அழுகின்றாள்......?"

கோபம்—வெறுப்பு; இப்போதிகைப்பாக–கனிவாக மாறி...

"தேவி...!"

தேவி தலை நிமிரவில்லை...... அழுகையின் வெடிப்பு அதிகரிக்கிறது...

"தேவி..."

அவன் கரங்கள்அவளை ஆதரவோடு தூக்கி அவள் கண்ணீரைத் துடைத்து ... கரங்கள் குளமாகின்றன......

எண்ணத்திலே சிறு உதைப்பு — ! 'மனைவி' போன்ற எண்ணம் ... அவள் தன்னுடையவள் என்ற தனித்துவம்......

"இவள்" என்னுடைய மனைவியாகவே இருந்து விட்டால் ......?"

"சீ ...! இது என்ன எண்ணம் ... ? முடிந்ததைப் பற்றி ஏன் இந்த மனம் பேதலிக்கிறது ......?"

"தேவி...!"

அவள் பதில் சொல்லவில்லை ... தலையணை உறையிற்குள் கசங்கிய தந்தி இருந்து அவள் சொல்ல வேண்டிய பதிலைச் சொன்னது....! "உனது ... எதிர்காலக் கணவன் ... இறந்து ... இறந்து ... விட்டான்!"

வாசிக்கும் போது அவன் குரல் நடுங்கியது ... உள்ளமே அந்த ரயிலின் குலுக்கத்தைப் போலக் குலுங்கியது......

வாழ வேண்டிய அந்த மலர் இளமையிலேயே வாழ முடியாமல் வாடி வதங்கி காலத்தின் காலடியில் மிதிபட்டு, மாய வேண்டியதுதானா?

அவளுடைய அழுகுரல் மெல்ல மெல்லமாகக் குறைகிறது ... அவளை விரும்பிய அதே உள்ளம் அவளை வாழ வைக்காதா......?

துன்பத்திற் கூட இன்பத்தையே நுகர வேண்டுமென்ற துடிப்பு ... மரண நிலையிலும் கூட வாழவேண்டும் என்ற துடிப்பு இருப்பதைப் போல ...... அவள் வாழ விரும்புகிறாள் ... !

அவள் விருப்பத்திற்குக் குறுக்கே நின்ற விலங்கில் இருந்து அவளுக்கு விடுதலை கிடைத்து விட்டது ...

"கனகு ... எனக்கு வாழ்வு மலருமா ......?"

தேவியின் குரல் அவன் நெஞ்சை ஈட்டி போலத்தாக்கி வேதனை இரத்தத்தை வடிய வைக்கிறது ... சற்று முன் அவன் நினைத்த நினைப்பு — ? "இவள் என்னுடைய மனைவியாகவே இருந்து விட்டால் ..." கனகு மௌனியாகிறான் ... அவனால் பேச நாஎழவில்லை ......பரிதாபகரமாக அனுதாபத்தோடு தேவியைப் பாத்து விட்டு தலையைக் குனிந்து —

"தேவி......"

மௌனம் அழிகிறது ...

தயக்கம்... கண்களில் நீர்த்திவாலைகள்... 'கொன்னை' தட்டுகிறது... 'விக்குவிக்கென்'று...

"காலம்... கடந்துவிட்டது... போனமாதம்... நான் ...நான்... எனது கையெழுத்தை இன்னொரு கையெழுத்துக்குப் பக்கத்தில் ... நாளைக்கு ...... நாளைக்கு ...... கலியாணம் ... தேவி ..."

கனகு அவளைப் பார்க்கவில்லை. .வெளியே இருளைவெறித்து வெறித்து நோக்கினான் ... அவள் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுகிறாள் ...

"நாளைக்கு அவள் வாழ்வு எரிந்து கொண்டிருக்கையில், நீ இன்னொன்றிற்கு வாழ்வைத் தந்து கொண்டிருப்பாய் ..." எண்ணத்தின் மோதல் ... நெஞ்சம் வேதனையால் அதிருகிறது ... இனிமேலும் அதைத் தாங்கவே முடியாது ...!

தீராத மனச்சுமையுடன் எதிர் ஸ்டேசனில் கனகு இறங்கிக் கொள்கிறான். அவனால் இறங்காமல் இருக்க முடியவில்லை... எப்படி அவளோடு, அவனால் பயணம் செய்ய முடியும்....?

அவனைப் பிரித்துக் கொண்டு ரெயில் ஓடி மறைகிறது... பாதையிலே இருள் !— மீண்டும் ஒரு நினைவு மின்னல் !

அவன் அடுத்த ரெயிலுக்காகக் காத்துக் கொண்டு நிற்கிறான் . . .!

அவன் நெஞ்சில் ஒரு அலை...!

அடுத்த 'ரயில்' . . . !


(யாவும் கற்பனை)

**“1947–48-ம் ஆண்டில் மந்திரி சபையில் அனைவரும் பேசி முடிவு செய்ததன் பிரகாரம் அந்த ‘எண்ணத்தையும்–நோக்கத்தையும்’ டி. எஸ். அணுவும் பிசகாமல் நியாயமாகவே நிறைவேற்றி நடந்திருப்பின், 1952-ம் ஆண்டிலிருந்து இலங்கைச் சரித்திரமே சமாதானமானதொரு பாதையில் சென்று முடிந்திருக்கும்”**

# டி. எஸ். சேனநாயக்காவின் மாபெரும் தவறு

## ‘சிங்களம் மட்டும்’: தேர்தல் கூச்சல்: தொல்லைமிகு அவசரகால நிலைமை: வாழ்விழந்த ஜனநாயகம்: புத்திரபாசம்: ‘சண்டமாருதப்பறவை’

— பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் —



சுதந்திர இலங்கையின் முதலாவது மந்திரி சபை

“ஹறீன் வாசா”
லிங்கம் தோட்டம்,
வவனியா, 2-4-1962.

எனது அருமையான ஹறீன்,

உங்கள் அம்மா விவாகமாக முன்னர் எனது அந்தரங்கக்காரியதரிசியாக் கடமையாற்றினார். அக்காலத்தில் உங்கள் அப்பாவினது கட்டுரைகளையும், பிரசுரமான பிரசங்கங்களையும், புதினத்தாள் செய்தி நறுக்குகளையும் பத்திரமாகச் சேமித்து இப்போது கைவசம் வைத்திருக்கின்றார். அவருடைய தொகுப்பிலிருந்து இந்தக் கடிதத்தை எழுதுவதற்கேற்ற இரண்டு பெறுமதியான சாதனங்களைப் பெற்றுக் கொண்டேன். அவற்றை இத்துடன் அனுப்பும் புகைப்படங்களிலிருந்து நீங்கள் கண்டு கொள்ளக்கூடியதாயிருக்கும்.

முதலாவது:— சுதந்திர இலங்கையின் ஆரம்ப மந்திரி (கபினெட்) சபையினர், 1947-ல் முதன்முதலாக கூட்டாக எடுத்துக் கொண்ட புகைப்படம்.

இரண்டாவது:— இலங்கையின் சுதந்திரம் பற்றிய அம்சங்களடங்கிய சட்டநகல் திட்டம். அதில் ஒவ்வொரு மந்திரி மாரினதும்கையெழுத்து இடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இந்த நகல் திட்டம் மந்திரிசபையினரால் ஆராயப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதின் பின்னர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு இலங்கைச் சுதந்திர சாசனமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஏற்கெனவே குறிப்பிட்ட விபரங்களில் சிலவற்றை, வலியுறுத்தும் நோக்கத்தோடு, மீட்டும் எடுத்துரைக்கின்றேன். அதாவது “சோல்பரி அரசியல் திட்டம் இலங்கைக்கு பரிபூரண சுதந்திரத்தினையோ அல்லது சுய ஆட்சி அந்தஸ்தினையோ வழங்கவில்லை.” 1947-ம் ஆண்டின் இலங்கை (அரசியல்சட்டம்) சபைநியமன விதிகளுக்குரிய முகவுரைவிளக்கக் குறிப்பில் இரண்டு முக்கியமான பொருள் பொதிந்த பாகங்களை இங்குதருகின்றேன். அவை எனது அபிப்பிராயத்திற்கு ஆதாரமாய் அமைந்துள்ளன.

முதலாவதாக:- “சோல்பரி அரசியல் திட்டம் போதிக்கும் பொதுக் கருத்திற்கிணங்கியவோர் அரசியல் சட்டத்தை ஆக்கிக் கொண்டால் அவ்வழியில், இலங்கையில் அரசியல் முன்னேற்றத்தை அடைய வேண்டிய சமுகமான அடிப்படை ஒன்றினைச் சுலபமாக ஏற்படுத்தமுடியும். (பரந்த நோக்கில் பார்க்குமிடத்து, இந்த முறையிலேற்படுத்தப்படும் அரசியல் சட்டம் இலங்கை சட்டசபைக்கமைந்த மந்திரிமாரினாலேயே எடுத்துக் கூறப்பட்ட அரசியல் சட்ட அமைப்பு விபரத்தில், இரண்டாவது (செனட்) சபை சம்பந்தப்பட்ட அம்சங்கள் தவிர்ந்த ஏனையவற்றுடன் இசைந்து போகக்கூடியது)”.

இரண்டாவதாக:- “வெஸ்ட் மினிஸ்டர் பிரமாணங்கள் போன்ற சட்டத் தயாரிப்பு ஒழுங்கு முன்னடியே மக்கள் அரசியல் முன்னேற்றம் அடைந்து கொண்டமைக்கோர் அரும் பெரும் சான்றாகும். அந்த அரசியல் முன்னேற்றத்தை அடைந்த மார்க்கங்களிலும் பார்க்கப் பிரதானமானது அதன் பெறுபேறாகும். எனவே, மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கத்தின் மனமார்ந்த நம்பிக்கையாவது, இலங்கை மக்கள் இந்தப் புது அரசியல் சட்டத்தை மனப்பூர்வமாகவும், திடசங்கற்பத்துடனும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும். இதன் பிரகாரம் ஒப்புநோக்கின் எண்ணியதிலும் பார்க்க குறுகியகால எல்லைக்குள் அரசியல் சுய ஆட்சி அந்தஸ்தை அவர்களால் அடையமுடியும். படிப்படியாக இந்தக் குறிக்கோளை அடைவதற்கு எடுக்கப்படும்காலஎல்லை மக்கள் இந்தப் புது அரசியல் சட்டத்தை அறிந்து ஏற்று அமுல்நடத்தும் ஆற்றலிலும், அநுபவத்திலும் தான் தங்கியுளளது.”

எனவே மந்திரிசபையின் முதற்கடமையாக இருந்த விஷயம்; “அரசியல் சட்ட முகவுரை விளக்கக்குறிப்பில் கூறியதற்கிணங்க, ‘குறுகிய கால எல்லை’ சந்தர்ப்பம் வரும்வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை; நேரகாலத்தோடு அதற்குரிய நேரம் வந்து விட்டது. தாமதம் சற்றுமின்றிச் சுதந்திரம் தந்தே ஆகவேண்டும்; தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாத சமாச்சாரம் இதுவாகும்.” இவ்வாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் திருப்திசெய்ய முயற்சிஎடுக்கப்பட்டது. பூரண சுதந்திரத்தை விரைவில் அடைவதற்கு முட்டுக்கட்டையாகக் கிடந்த சோல்பரி அரசியல் திட்டத்தின் சில கட்டுப்பாடுகளை நீக்கிவிடுவது சம்பந்தமான சட்டப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. பாதுகாப்பு ஒப்பந்தங்கள் போன்ற சாதகமான சாதனங்கள் முறையாக ஆயத்தப்படுத்தப்பட்டன. இந்தப் பத்திரங்களைத் தயாரிப்பதிலும், ஒப்பந்தத்தை உருவாக்குவதிலும் ஒலிவர் குணத்திலகா எடுத்துக்கொண்ட பங்கும், சிரமமும் மிகவும் பெரியது. இந்தப் பத்திரங்களும், சாதனங்களும் மந்திரிசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் தாரதம்மியங்களும் ஆராயப் பட்டுத் தீர்மானிக்கப்பட்டன. இப்படியான தீர்மானங்கள் “மந்திரி சபை முடிவுகள்” என வழங்கப்படும்.

### சுவையான சம்பவங்கள்

இந்தக் கட்டத்தில் மந்திரி சபையில் சுவையான ஒரு தர்க்கம் ஏற்பட்டது. சுதந்திர இலங்கையின் முதலாவது கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்படவேண்டியவர் யார் என்பதுவே அந்தத் தர்க்கசம்பந்தமான விஷயமாகும். பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா முன்னைநாள் கவர்னர் சேர். ஹென்றி மங்க் மேசன் மூர் அவர்களையே அந்தப்பதவியில் முதல் ஒரு வருடத்துக்கும் அமர்த்தவேண்டும் என விரும்பினார். எனக்கு அந்தப் பிரேரணை ஏற்றதாய் இருக்கவில்லை. இலங்கையர் அல்லாத ஒருவரை அதுவும் ஒரு வெள்ளைக்காரரை, அந்த இடத்தில் வைப்பதை விடுத்து, ஒரு தகுதி வாய்ந்த இலங்கையரையே சுதந்திர இலங்கையின் முதலாவது கவர்னர்ஜெனரலாகத் தேர்ந்தெடுத்து வைக்க வேண்டுமென வாதாடினேன். “உடனடியான சுதந்திரம் வேண்டுமென்று தீவிரமாக நாம் கேட்டு நின்றபோது, மந்திரிமாரின் இராஜீயப் பேச்சுவார்த்தைகளை மிகவும் கண்ணியமான முறையில் ஆதரித்து உதவியவர் சேர் ஹென்றிமங்க் மேசன் மூர் அவர்களே தான். ஆதலால், அந்த நன்றியுணர்வைப் பிரதிபலிப்பதாக இந்த மந்திரிசபையின் முடிபு அமைவது நல்லது” என்று வினயமாக வேண்டினார் டி. எஸ்.

இந்தக்காரணத்தை டி. எஸ். தெரிவித்தபோது எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இடையிட்டுரை செய்தார். மந்திரிசபையில் அவரே தான் அப்போதைய நிலையில் சேனநாயக்காவுக்கு இரண்டாவது இடத்தில் வைத்து எண்ணப்பட்டார். உள் நோக்கத்தை வெட்ட வெளிச்சமாகவும், திட்டவட்டமாகவும் அவர் தெரிவித்தபோது, அது டி. எஸ். வின் உளவும் களவுமான உள்ளக்கிடக்கையையும் ஓரளவு வெளிப்படை யாக்குவதாகவே இருந்தது! “கேளுங்கள், சுந்தரே! எங்கள் எண்ணமும் - நோக்கமும் என்னவெனில், மங்க் மேசன் மூர் அவர்களை கவர்னர்ஜெனரலாக ஒரு வருடத்திற்கு மட்டும் நியமிப்பதை நாம் இப்போது அங்கீகரிப்போம். பின்னர் அதைத் தொடர்ந்து டி. எஸ். அந்த உரிமையைப் பெற்று அவரிடத்திற்குக் கவர்னர் ஜெனரலாக வருவார். டி. எஸ். வைத் தொடர்ந்து நான் அந்த உரிமையைப் பெற்று அவரிடத்தில்பிரதமமந்திரியாக வருவேன்” இந்த வார்த்தைகள் என் செவியில் விழுந்தன! “இலங்கையரல்லாத ஒருவரை சுதந்திர இலங்கையின் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கக் கூடாது” என்னும் எனது ஆட்சேபனையை வாபஸ் பெற்றுக் கொண்டேன். டி. எஸ். வின் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஐயகோ!
“என்னே! மானிடர் உபாயம்
சுண்டெலி உபாயம்
போன்று
திண்ணமாய்த் தீட்டிவைத்
திட்டமும் செய்கை யாவும்
மண்ணதாய்ப் போகும் பாரில்
மதியுமே சதியாய்ச்சூழும்”
(புண்ணியம் கடமை செய்வீர்!
புகழ்சுகம் பெறலாம்
பின்னே.
[ஆங்கிலக்கவிஞர் —மூலம்—
ருெபேட் பேண்ஸ்.]

அன்று, எஸ். டபிள்யு. ஆர்.) டி. பண்டாரநாயக்கா அந்த வேளையில் எடுத்துரைத்தபடி அவரின் “எண்ணமும் நோக்கமும்” நேர்மையாகவே நிறைவேற்றப் பட்டிருப்பின் ... இன்று...

இலங்கைக்கு இந்தக்கதியும் அவலநிலைகளும் ஏற்பட்டிருக்க மாட்டாது. இப்பவும் இதை எண்ணிப் பலவேளைகளும் என் பாட்டிலேகவலைப்படுவதுண்டு.

அந்தத் திட்டம் வழிமுறைப் படி பூர்த்தியாக்கப்பட்டிருப்பின், எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவே சுதந்திர இலங்கையின் இரண்டாவது பிரதமராக வந்திருப்பார். அவரை வேறொருவரும் அகற்றித் தள்ளி விட்டிருக்கமுடிந்திருக்காது.

ஒலிவர் குணத்திலக்கா ஒரு போதும் இலங்கையின் கவர்னர் ஜெனரலாக வந்திருக்க மாட்டார். வரும் உரிமையும் அவருக்கு இருந்திருக்காது.

### துவேஷக் கிளர்ச்சி

‘சிங்களம் மட்டும்’ என்னும் தேர்தல் கூச்சல் கடைசி பரியந்தம் ஏற்படச்சந்தர்ப்பம் இடம் கொடுத்திருக்காது. ‘சிங்களம் மட்டும் அரசாங்க மொழிச்சட்டம்’ நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்காது. நாட்டில் இந்தத் துவேஷக்கிளர்ச்சியை ஏமாற்றமடைந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா வேண்டுமென்றே விஷமத்தோடு உண்டாக்கினார். அதன் வழியில் பிரதமமந்திரிப் பதவியைத் தன் ஆயுட்காலத்தில் அடைந்துவிட வேண்டுமென்பதே அவரின் ஒரே பிடிவாத நோக்கமாய் இருந்தது.

மேலும், 1956-ம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள், கத்திக்குத்துக் கொலைகள், அம்மம்ம! வாய்திறந்து பேச முடியாத அநேகம் அக்கிரமங்கள், வர்ணிக்கமுடியாத இரத்தக்குழிப்புகள் ஆகிய அத்தனையும் ஏற்படக் கூடியதானவோர் சூழ்நிலை என்றும் உருவாகியிருக்க முடியாது.

பெருங்கலகங்களும், இனப்பூசல் பிளவுகளும், சகிக்கொணாத்துன்பங்களும், எண்ணற்ற கஷ்ட நஷ்டங்களும் ஏற்படாமல் இலங்கையைக் காப்பாற்றியிருக்க முடியும்.

அது மட்டுமா, அவசரகால நிலைமை ‘56’ அவசரகாலநிலைமை ‘58’ அவசரகாலநிலைமை ‘59’ அவசரகாலநிலைமை ‘61’ இன்னும் அல்லலும், தொல்லையும தந்து ஆண்டொன்றுக்கு நீண்டு (அதாவது, 11 நாட்கள் குறைய ஒரு வருடம்) இப்போது, அரைகுறையாகத் தளர்த்தப்பட்ட “வரையறைவற்ற அவசரகால நிலைமை” ஆகிய அனைத்துக்கும் ஏதுகாரணங்கள் ஒன்றும் ஏற்பட்டிருக்காது.

**டி .எஸ். சேனநாயக்கா தனது தாய்நாட்டிற் கொண்டிருந்த பற்றிலும், பக்தியிலும் பார்க்க, தனது மகன் டட்லி மீது வைத்திருந்த அன்பும், அக்கறையும் மிதமிஞ்சிப் போகாது பார்த்திருப்பாராயின் அதாவது, மகனுடைய முன்னேற்றத்திலும் பார்க்க நாட்டின் முனனேற்றமே பிரதான**

(8ம் பக்கம் பார்க்க)

## இன ஒதுக்கல்

தென்னாபிரிக்காவிலுள்ள வெள்ளையரல்லாதாருக்கு விடுதலை கிடைக்கும் வரை அவர்கள் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லையென தென்னாபிரிக்க இந்தியத் தலைவர் டாக்டர் டாடு அறிவித்திருக்கிறார். சமீப காலத்தில் அங்குள்ள இந்தியர்களுக்கெதிராக தென்னாபிரிக்க அரசாங்கம் சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானங்களும், கையாண்ட பல நடவடிக்கைகளும் சொல்லொண்ணாக் கொடுமை வாய்ந்தவையாகும்.

திரு. மணிலால் காந்தி (காந்திஜியின் புதல்வர்), டாக்டர் டாடு, டாக்டர் நாய்க்கர் ஆகியோர் தென்னாபிரிக்காவிலுள்ள இந்திய சமூகத்தினருக்குக் கடந்த பல வருடங்களாகச் சிறந்த சேவை செய்து வந்துள்ளனர். (துரதிருஷ்டவசமாக திரு. மணிலால்காந்தி காலமாகிவிட்டார்.) தென்னாபிரிக்காவில் ஆசியாக்காரர்களுக்கும், நீக்ரோக்களுக்கும் எதிராக இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை வருணிக்கமுடியாது. பகிரங்க நடைபாதைகளில் குறிப்பிட்ட இடங்களில் நடந்துசெல்லவும் அவர்களுக்கு உரிமை கிடையாது. வாகனங்களிலும், மற்றும் பொது இடங்களிலும் அவர்கள் தீண்டாதவர்களாய்க் கருதப்பட்டுவருகின்றனர். இந்தியர்களைப்பொறுத்தவரை அவர்கள் "கூலி" அல்லது "சாமி" என்று அழைக்கப்படுவார்கள். "சாமி" என்பது உயர்ந்த பதமன்று. ராமசாமி, பெரியசாமி, சின்னச்சாமி என்ற பெயர்களை அங்கு குடியேறிய தமிழர்கள் கொண்டிருப்பதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறார்கள். அதாவது சமூகத்தில் மிகவும் தாழ்ந்தவர்களாகக் கறுப்பர்கள் அங்கு ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், டாக்டர் மலான், டாக்டர் வெர்வூட் போன்ற பிரதம மந்திரிகள் இந்தக் கொடுமையின் நாயகர்களாய் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கா அனுஷ்டித்துவரும் இன ஒதுக்கல் கொள்கையின் காரணமாகவே அந்நாடு காமன்வெல்த்தில் பகிஷ்காரம் செய்யப்பட்டு, ஒதுங்கி வாழ்கிறது. உலகிலேயே அதி பிற்போக்கான கொள்கைகளை அனுஷ்டித்துவரும் தென்னாபிரிக்கா, அண்டையில் பல நாடுகளில் ஏற்பட்டுவரும் சுதந்திர கிளர்ச்சிகளைக் கண்டு கிலி கொண்டுள்ளது. கடைசிவரை நேரடி இன ஒதுக்கல் கொள்கையை நிலைநாட்டப்போவதாய் அது கூறிவருவது விந்தையாயிருக்கிறது. ஐ. நா. வில் பலமுறை இந்நாடு பலத்த கண்டனங்களுக்கு உட்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்க இனத்துவேஷத்தின் சுவாரஸ்யமான அம்சங்கள் முதல் மகா யுத்தத்துக்குமுன்பு வெளியாகின. அக்காலத்தில் காந்தி மகாத்மா தென்னாபிரிக்காவில் நடத்திய போராட்டங்களும், அதன்

# உலகமேடை

டி. எம். எம்.



பலனாக சிறைசென்றதும் ஞாபகத்துக்குவருகின்றன. ஜோகன்ஸ்பர்க்கிலும் நேட்டாவிலும், டர்பனிலுமிருந்து அவரது பெயர் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் பரவியிருந்தது. தென்னாபிரிக்கா சென்ற இந்தியர் ஒப்பந்தக் கூலி முறையின்கீழ் பட்ட அவதிகளை கல்லும் கசிந்துருகும்வகையில் அவர் எழுதியிருக்கிறார். குறிப்பிட்ட காலம்வரை ஒரு எஜமானரின்கீழ் வேலை செய்வதற்கான ஒப்பந்தமே இந்த "ஒப்பந்தக்கூலி முறை." இந்தக் குறிப்பிட்ட காலத்தில் இந்த "அடிமைகள்" எவ்வளவு கொடுமைகளுக்கு ஆளானார்கள் என்பதும், இந்த முறையை ஒழிக்க காந்திஜீ எவ்வளவு கடும் போராட்டம் நடத்தினார் என்பதையும் அறியும்போது அதன் தன்மை நன்கு தெரியும். பிற்காலத்தில் அவரது முயற்சியினால் இது ஒழிக்கப்பட்டுவிட்டது. மேலும் தலைக்கு இத்தனை பவுன் வரி செலுத்த வேண்டும் என்றும் இந்தியர்கள்மீது அங்கு சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. இதுபோன்ற சில விஷயங்கள் கடும் போராட்டத்திற்குப்பின் ஒழிக்கப்பட்டுவிட்டனவாயினும் அங்கு கறுப்பர்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு அடிப்படையான வாக்குரிமை கூடக் கிடையாது. கறுப்பர்களின் சார்பாக வெள்ளையர்களே சட்டசபையில் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பெயருக்குத்தான் பிரதிநிதிகளே ஒழிய, கறுப்பர் ஒழிப்பு நடவடிக்கையை நூற்றுக்குநூறு ஆதரித்து வாக்களிப்பார்கள்.

தென்னாபிரிக்காவில் பிரபல இந்திய வியாபாரியான தாதா அப்துல்லாவின் வழக்கறிஞராக காந்திஜி கடமையாற்றிய பொழுதே, பொதுவேலைகளிலும் ஈடுபட்டிருந்தார். அவர் தென்னாபிரிக்கா சென்ற புதிதில் ரயிலில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்தபோது ஏற்பட்ட அனுபவமே 20 வருடம் அவரை அந்நாட்டில் தங்கச் செய்தது. கறுப்பு மனிதன் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ததைச் சகியாத ஒரு வெள்ளையன், அவர் கீழே இறங்க மறுத்ததைத்தொடர்ந்து கீழே பிடித்துத் தள்ளினான். நடுநிசியில் குளிரில் நடுங்க அவர் விழுந்த இடத்திலிருந்தே சிந்தித்தார். கறுப்பர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கும் பாணியில் அப்போதே அவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுவிட்டார். சுமார் 50 வருடங்களுக்குமுன் இச்சம்பவம் நடைபெற்றது. அவர் நடத்திய எண்ணற்ற போராட்டங்களினால் தென்னாபிரிக்க நிலைமை வெளி உலகுக்குத் தெரிந்தது. கறுப்பர்களுக்கெதிரான முறையற்ற சட்டங்களை அவர் பகிரங்கமாக மீறினார். தண்டனைக்குள்ளானார். பல அவமரியாதைகளுக்கு உட்படுத்தப்பட்டார். ஆயினும் தம்மைச் சிறையிலிட்ட பிரதமர் பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸுக்கு, சிறையில் தாமே தைத்த செருப்பை விடுதலையானவுடன் பரிசளித்தார்.

பகிரங்கமாகச் சட்டங்களை அவர் எதிர்த்தபோதிலும் தென்னாபிரிக்காவில் பல ஆங்கில நண்பர்கள் அவருக்கிருந்தனர். அவரது நல்லெண்ணம் வெள்ளையர்களுக்குத் தெரிந்திருந்தது. தென்னாபிரிக்க அநீதிகளை ஒழிக்க அந்நாட்டில் மட்டுமின்றி, லண்டனிலும் இந்தியாவிலும் அவர் போராட்டம் நடத்தினார். காந்திஜீ இந்தியா திரும்பியபின் போராட்டம் மந்தமடைந்தபோதிலும், நீண்டகால இடைவெளிக்குப்பின், அண்டை நாடுகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாறுதல்களால் மீண்டும் அதற்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

## டிகாலுக்கு ஆதரவு

அல்ஜீரியயுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு பெருவாரியான பிரெஞ்சு மக்கள் சம்மதமளித்திருப்பதை, அங்குள்ள பயங்கரவாதிகள் சவப்பெட்டிக்கு அடிக்கப்பட்ட இறுதிஆணியாகக் கொள்ளலாம். அநேகமாக பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்றுகூட நிச்சயமாகக் கொள்ளலாம். அல்ஜீரிய விஷயத்தை இஷ்டப்படி கையாளும்படி வாக்கெடுப்பு அதிபர் டிகாலுக்கு சர்வாதிகாரம் அளித்துவிட்டது. பார்லிமெண்டின் சம்மதமின்றியே இவ்விஷயத்தை அவர் கையாள எவ்விதத் தடையும் இல்லை. இதற்கிடையில், தனது நிலையை மீண்டும் பலப்படுத்திக்கொள்ள அவர் பொதுத்தேர்தல் நடத்தவிருப்பதாயும் தெரிகிறது. பொதுத்தேர்தல் நடைபெறுமானால், இடதுசாரிகளுக்கு அதிகப்பலம் ஏற்பட்டுவிடுமாதலால் தேர்தல் இல்லாமலேயே வேறு பிரதமரை அவர் தேர்ந்தெடுக்கக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் அல்ஜீரியாவில் பதவிஏற்றுள்ள இடைக்கால நிர்வாகசபையிடம் உள்நாட்டுநிர்வாகப் பொறுப்பை பிரெஞ்சுக்காரர் ஒப்படைத்துவிட்டனர். உள்நாட்டில் 60,000 பேரடங்கிய ராணுவத்தை அது பராமரிக்கத் திட்டமிட்டுள்ளது. அல்ஜீரிய சுயநிர்ணயம் சம்பந்தமாக, வாக்கெடுப்பு நடைபெறும் வரை அங்குள்ள பிரெஞ்சு ராணுவம் செயலற்று இருக்கக்கூடாது. பயங்கரவாதிகளை ஒழிக்கும் விஷயத்தில் அது இன்னும் தீவிரமாய் ஈடுபடுவதுடன், இடைக்கால நிர்வாக சபையிடமிருந்தும் உதவிபெற்றுக் கொள்வது அவசியமாகும். மேலும், சுயநிர்ணய வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பே, பயங்கரவாதிகளை ஒழித்துவிடவேண்டும். இன்றேல் வாக்கெடுப்பு சமயத்தில் இதுவரை இல்லாத பயங்கர நடவடிக்கைகளை ஓ. ஏ. எஸ். காரர்கள் கையாளுவார்கள் என்பது தெளிவு. ஸ்தாபனத்தின் பிரதான தலைவர் ஜெனரல் ஸலான் கைது செய்யப்பட்டதாக ஒரு செய்தியும், அவர் தப்பிக் கொண்டுவிட்டதாக வேறு செய்தியும் கூறுகின்றன. இது பற்றியஉண்மை சரியாகத் தெரியவில்லை. அல்ஜீரியாவில் பிரெஞ்சு ராணுவம் ஜெனரல் ஸலானைச் சிறைப்பிடிக்கும் விஷயத்தையே முதலில் கையாளவேண்டும். எப்பாடுபட்டாவது முதலில் அவர் கைதுசெய்யப்படுவது அந்நாட்டில் சமாதான வாழ்வை நிலைநாட்டுவதற்கான காலத்தைக் குறைக்க உதவியாய் இருக்கும். எனினும் ஓ. ஏ. எஸ். முக்கியதலைவர்கள் சிலர் ஏற்கனவே கைதாகி இருப்பது ஓரளவு ஆறுதலைத் தருகிறது. காட்டுமிராண்டித்தனம் இன்னும் அங்கு ஓயவில்லை என்பதிலிருந்து ராணுவத்தின் முழுப்பலம் பிரயோகிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டிருப்பினும் கூட, அல்ஜீயர்ஸிலும், ஓரானிலும் வீசப்படும் பிளாஸ்டிக்குண்டுகள் ஒரு விஷயத்தைத் தெளிவாக்குகின்றன. இன்னும் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்களை அங்கு சிறைப் பிடிக்க வேண்டியிருக்கிறது என்பதே அது. ராணுவம் உடனடியாகச் செயலில் இறங்கி பயங்கரவாதிகளைப் பூரணமாக வளைத்துக்கொள்ள வேண்டும். லட்சக்கணக்கான துருப்புக்களைக் கொண்ட பிரெஞ்சு ராணுவத்திற்கு இது பெரியகாரியமில்லை. பிரெஞ்சுக்காரர், பிரெஞ்சுக்காரரை எதிர்ப்பதை விட முஸ்லீம்களைக் கொண்ட ராணுவம் இதை நன்றாகச்செய்யமுடியும். ஜெனரல் டிகால் சாமர்த்தியசாலி. ராஜதந்திரமும், ராணுவதந்திரமும் பொருந்தியவர். திடசித்தமும், செல்வாக்கும் படைத்தவர். உரிய சமயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் திறமைசாலி. எனவே அல்ஜீரிய விஷயத்தில் அவர் துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறார். பிரெஞ்சிலும் நாசவேலைகள் செய்ய பயங்கரவாதிகள் திட்டம் போட்டிருந்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமான திட்டம் கைப்பற்றப் பட்டிருப்பதாயும் செய்திகள் கூறின. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்டுள்ள சிறுபான்மையினரான இந்தக் காடையர் கும்பலை துரிதமாக ஒழிக்காவிட்டால் ஜெனரல் டிகாலின் உயிருக்கே ஆபத்து ஏற்படும். அதில் அதிசயமுமில்லை. ஏற்கனவே அதிபரைக் கொல்லச்சதி நடைபெற்றிருக்கிறது. இனித்தான் அது தீவிரமாய் இருக்கும். அல்ஜீரியாவை ஒரு காங்கோவாக ஆக்கி, சுதந்திர அரசாங்கம் செயல் படாமல் செய்வதே பயங்கரவாதிகளின்உத்தேசம். இதற்காக ஜெனரல் டிகாலாய் இருந்தாலும் சரி, வேறு எவராய் இருந்தாலும் சரி அவர்களைக் கொல்லபயங்கரவாதிகள் ஒருபோதும் தயங்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில் சுயநிர்ணய வாக்கெடுப்புக்கு முன் பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட்டுவிடவேண்டும் என்பதே எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் தெளிவாகிறது.

## ராஜன்பாபு

அடுத்தமாதம் 12-ம் தேதி ஓய்வுபெற்றபின் பாட்னாவில் ஆசிரம வாழ்க்கையை மேற்கொள்ளப்போவதாய் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரபிரஸாத் தெரிவித்திருக்கிறார். ஆடம்பரமான ராஷ்டிரபதி பவனத்தில், இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த ராஜன் பாபுவின் வாழ்க்கையில் இது திடீர்த்திருப்பமாய் இருக்கும்.



என்னதான் பதவியும் பெருமையும் இருந்தபோதிலும் ராஜேந்திரரின் அடிப்படையான எளியவாழ்வும், உயரிய சிந்தனையும் பாதிக்கப்பட்டதில்லை. உண்மையில் தமக்கு விருப்பமுள்ள அமைதியான ஆசிரம வாழ்வுக்குப் போகிறார் ஜனாதிபதி. மகாத்மாகாந்தியும் ஒரு ஆசிரமவாசியாய்த்தான் இருந்தார். ஆசிரமத்திலிருந்து அவர் நாட்டை நடத்திவந்தார். டாக்டர் பிரஸாத்தோ, மாளிகையிலிருந்து நாட்டைநடத்திவந்தபின், இப்போது ஆசிரமவாசத்தையே நாடுகிறார்.

டாக்டர் ராஜேந்திரபிரஸாத் பீகாரின் தவப்புதல்வராகும். சம்பரானில் மகாத்மாகாந்தி நடத்திய அவுரித்தோட்ட போராட்டத்தில், அவருக்கு உறுதுணையாய் இருந்தார். பீகார் வெள்ளத்திலும், பூகம்பத்திலும் அவர் பெரும் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டார். இந்திய சுதந்திரப்போராட்டத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவராகவிளங்கியவர் ராஜன் பாபு. சிறந்த எழுத்துத்திறமையும், பன்மொழிப்பாண்டித்தியமும் உடையவர். பெரும் நிர்வாகத்திறமை வாய்ந்தவர். சாந்தமே உருக்கொண்ட தலைவர். அவர் பதவியிலிருந்து விலகுவது நேருவுக்குப்பெரும் நஷ்டமாகும். பிரதமருக்கு ஆலோசனை கூறி உதவிய பல தலைவர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் மறைந்து வருவதே இதற்குக் காரணம். பிரபலமான பொதுஜனத்தலைவர்கள் கடைசிக்காலத்தில் மூலையில் ஒதுங்கி வாழ்ந்த உதாரணங்கள் சிலவேயாகும். ஆச்சார்யா கிருபாளினி, ராஜாஜி, ஜயப்பிரகாஷ்நாராயண், ஈ. வே. ராமசாமிநாயக்கர் போன்றோர் அரசியல் வாழ்வில் தோல்வியடைந்துவரும் போதிலும் பொதுவாழ்வில் இன்றும் ஈடுபட்டுத்தான்வருகிறார்கள். தினசரி நடவடிக்கைகளில் அவர்களது பெயர்கள் நாட்டில் அடிபட்டுவருகின்றன.

சதியிலும், பலாத்கார நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்த அரவிந்தகோஷ், புதுச்சேரியில் அஞ்ஞாதவாசம் செய்த சமயத்திலேயே லோகாயத வாழ்வை விட்டு பரமார்த்திகத் துறையில் புகுந்தது குறிப்பிடத் தக்கது. முழுக்க முழுக்க உலகவாழ்வில் ஈடுபட்ட அரவிந்தர், கடைசியில் ஆசிரம வாழ்வை நாடி ஞானியானார். வீரசவர்க்கார், காலஞ்சென்ற டாக்டர் எம். என். ராய் போன்றவர்களும் கூட கடைசிக் காலத்தில் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் தான் இருந்தனர். இருந்தும் வருகின்றனர். இவர்களில் யாரும் ஆசிரம வாழ்வில் புகவில்லை. முன்னாள் பர்மிய பிரதமர் ஊநு இடையிடையே பௌத்த பிக்குவாகி ஆத்மத்தூய்மை செய்து கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பூஜ்யம் தபால்

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு
பிரதமமந்திரி,
புதுடில்லி.

தலைவரே !

தங்களுக்கு எனதும், இலங்கையிலுள்ளமக்களினதும் அன்பார்ந்த புதுவருஷ வாழ்த்துக்கள். தங்களுக்கு உடல் நலம் சரியில்லை என்று கேள்விப்பட்டதும் இங்கு பலருக்கும் கவலை. அன்றாடம் சிரசாஸனம் செய்து தேகாலயத்தைப்பேணி வரும் தங்களுக்கு உடல்நலம் பாதிக்கப்படவேண்டிய காரணம் தெரியவில்லை.

சென்ற தேர்தலில் அமோகமான வெற்றிபெற்று மூன்றும் முறையும் தாங்கள் பாரத நாட்டின், உலகிலுள்ள மிகப் பெரிய ஜனநாயகத்தின், பிரதம மந்திரியாகியுள்ளதால் தங்களுக்கு பல பிரதமர்களின் திருஷ்டி விழுந்திருக்குமென்றும், திருஷ்டி கழிக்கவேண்டுமென்றும் எங்கள் வீட்டுப் பாட்டியம்மா கூறுகின்றார்கள்.

மேலும் தங்கள் உடல் அழகிலே ராஜாஜியின் திருஷ்டி விழுந்துவிட்டதை அறிவீர்கள். தங்கள் உடல் அழகைக்கண்டு தான் பல தாய்மார்களும் தங்களுக்கு வாக்குச்செய்திருக்கலாமென்று ராஜாஜி கூறியதைக் கேட்டதும், தங்களுக்கு திருஷ்டிதோஷம்தான் ஏற்பட்டிருக்கவேண்டுமென்பது எனக்கு ஊர்ஜிதமாகின்றது. தாம் இப்படிக் கூறியதற்காக ராஜாஜி பின்னர் தாய்மார்களிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டாலும், தங்கள் உடல் அழகைப்பற்றி அவர் அளித்த நற்சாட்சிப்பத்திரம்மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்கள் மீண்டும் பாரதத்தின் பிரதமமந்திரியாக விசுவாசப் பிரமாணமெடுக்கையில் கைகூப்பி நின்ற காட்சியைக் கண்டு என் மனம் உருகிற்று. வயது எழுபதுக்கு மேலாகியும், உடல்நலம் குன்றியும், கூட தாங்கள் மக்கள் சேவைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ள முன்வந்தீர்கள்.

தாங்கள் பல்லாண்டுகாலம் நீடூழிவாழ்ந்து, உலகமெல்லாம் ஒரே ஜனநாயகக் குடும்பமாக மகிழ்ச்சியுடன் வாழவழிகாட்ட வேண்டுமென்று எல்லாம் வல்ல திருவருளை பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:-

தங்கள் மந்திரிசபையில் சேர முடியாதென்று கூறிய ஷா என்பவரை மனம் மாற்றி அவரை மீண்டும் சேரும்படி செய்தது தங்களது முதல் வெற்றி. இனி தங்களுக்கு வெற்றிமேல்வெற்றி கிடைப்பதற்கு இதுஆரம்பமாக இருக்குமென்றே நம்புகிறேன்.

தாங்கள் பிரதமமந்திரி பதவியை ராஜிஞமாச் செய்துவிடவேண்டுமென்று, தோழர் ஜய்ப்பிரகாச நாராயண் கூறுகின்றார். எக்காரணம் பற்றி இது கூறப்பட்டாலும், தயவு செய்து, இந்த யோசனைக்கு செவிசாய்க்காமல், தாங்கள் நீடூழிகாலம் இப்பதவியை வகிக்கவேண்டுமென்று இங்குள்ள மக்களின் விருப்பத்தை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'பூவன்னா'

---

# உப்பு, புளி வெல்லம்
## பங்கீட்டு முறையில் விநியோகிக்கவேண்டும்
## தமிழில் கருமம் ஆற்றுவதில் தாமதம் கூடாது
### மாநகரசபைக்கு வரவிருக்கும் பிரேரணைகள்

யாழ்ப்பாணம், சனி.

"ஏழைமக்களின் பிரதான உணவுக்குரிய உப்பு, புளி, வெல்லம் ஆகியன தட்டுப்பாடகவும் விலையதிகமாகவும் இருப்பதால் இவைகளை அரிசி விநியோகம் செய்யும் பங்கீட்டுமுறைப்படி நியாயமான விலைக்கு வழங்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு. உணவு அமைச்சரையும், பிரதமரையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்றை திரு. எஸ். இராசரத்தினம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டு வருவார்.

இம் மாநகரசபையின் பொதுக்கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

### சோலைவரி

சோலைவரி கூட்டப்பட்டுள்ளதால்கூடிதலாக அறவிடும் விஷயத்தை ஒருகணிசமான அளவு 5 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கவேண்டும்என்று கேட்டுக் கொள்ளும் பிரோரணையை திரு. கே. எஸ். நடராசா கொண்டு வருவார்.

திரு. நா. த. செல்லத்துரை கீழ்வரும் பிரேரணைகளைக் கொண்டு வருவார்:-

1656-ம் ஆண்டிலிருந்தே இச்சபையின் அலுவல்கள் அனைத்தும் தமிழ் மொழி மூலமே நடைபெற வேண்டுமென்று தீர்மானத்திற்கு மேல் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டுள்ள பொழுதிலும் சபையின் அலுவலகங்கள் தமிழில் தொழிற்படாததையிட்டு வருந்தும் இச்சபை பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் சகல பகுதிகளும் உடனடியாகத் தமிழில் கருமம் ஆற்ற ஆரம்பிக்க வேண்டுமென்று கோரி சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு ஒரு சுற்றறிக்கையை விடவேண்டுமென்று முதல்வரைக் கேட்டுக் கொள்வதுடன் இது விஷயமாக எழக்கூடிய தாமதங்களை சபை மேலும் பொறுத்துக் கொள்ள மாட்டாதென்பதையும் வற்புறுத்த விரும்புகின்றது.

கலைப்புலவர் நவரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டும்.

பள்ளிச்சிறார், பொதுமக்கள், தொழிலாளர் ஆகியோரின் நன்மையை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரசபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட தெருவோரங்களில் நிழல் தரும் விருட்சங்களை நாட்ட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாலாம் வட்டார விதானை ஒழுங்கையின் மின்சார இணைப்பு மூன்று கம்பிஇணைப்பாகியுள்ளதைப் பற்றி திரு. ஜே. எஸ். அழகையா 12 உபகேள்விகளைக் கேட்பார்.

---

# தமிழ் தேசீய விவகார இலங்கைச் சங்கம்

தமிழ் தேசிய விவகார இலங்கைச் சங்கத்தின் அமைப்பாளர்கள் சார்பில் திரு ஏ. கே ஆர். வேதவனம், திரு. எஸ் சிவசுப்பிரமணியம் ஆகியோர் எழுதுவதாவது:-

நாட்டு மக்களின் பொதுநன்மைக்கும் குறிப்பாகத் தமிழர் நலன் பாதுகாப்பதற்குமாக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும் எனத் தமிழ் மக்களின் ஒரு சாராரிடத்தே விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஏனைய இன மக்களுடன் தமிழர் அதிக தொடர்பு கொண்டு ஒற்றுமையாக இருப்பதற்கு ஒரு நல்ல சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என இவர்கள் விரும்புகிறார்கள். இத்தகைய சங்கமொன்றைக் கூடிய விரைவில் ஸ்தாபிக்க வேண்டும் என ஒரு சிலர் முன்வந்துள்ளனர்.

தமிழ் மக்களிடையே இருந்து வரும் வேற்றுமைகளையும் துவேஷங்களையும் அகற்றி அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது இந்த முயற்சிகளின் ஒரு அம்சமாகும். ஏனைய இன மக்களுக்கும் தமிழருக்குமிடையே நல்லுறவையும் சிநேக மனப்பான்மையையும் ஏற்படுத்துவதற்குத் தமிழரிடையே ஒற்றுமை அவசியம் என நம்பப்படுகிறது.

விவசாயம், கைத்தொழில், பொருளாதாரம், சமூக கலாச்சாரங்கள் ஆகிய துறைகளில் நாடு முன்னேறுவதற்கு உழைப்பது இந்த இயக்கத்தின் இரண்டாவது நோக்கமாகும். இதற்கு வேண்டிய கமிட்டிகள் நியமிக்கப்பட்டு, ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்படும்.

பொது மக்களும் அரசாங்கமும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் வெளியிடுவது இந்தச் சங்கத்தின் மூன்றுவது நோக்கமாகும். பார்லிமெண்டரித் தேர்தல்களுக்கும் உள்ளூர் தேர்தல்களுக்கும் அபேட்சகர்களை அனுப்பி வைப்பதிலோ அல்லது, எந்த அபேட்சகருக்கும் ஆதரவளிப்பதிலோ இந்தச் சங்கம் ஈடுபடமாட்டாது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தச் சங்கத்தின் நோக்கங்கள் வருமாறு:-

1. இலங்கை மக்களின்பொது நலனுக்காகத் தேசிய முயற்சிகள் யாவற்றிலும் இயன்ற அளவு உழைப்பது

2. தேசிய முயற்சிகள் யாவற்றிலும் தமிழ் மக்களின் நலன் வளர்ச்சிக்கு உழைப்பது. அத்தோடு இந்த முயற்சிகளில் தமிழ் மக்களுக்கும் பிரத்தியேக கவனிப்பு தேவைப்படும் சமயங்களில், அவற்றைக் கவனிப்பது.

3. கௌரவமுடைய சமாதான கூட்டு வாழ்க்கையை ஏற்படுத்த இயன்றவரை உழைப்பது. யாதும் ஊரே, யாவரும் ஒன்றே என்ற உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து நிறைவேற்றுவது.

4. பல பகுதிகளிலுமுள்ள மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதோடு சகல ஸ்தாபனங்களுடனும் தனிப்பட்டவர்களுடனும் சேர்ந்து சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முயல்வது.

புது வருடப்பிறப்புத் தினத்துக்குப் பின்னர் இச்சங்கத்தைத் தொடக்கி வைப்பதற்கான கூட்டம் கொழும்பில் நடைபெறவிருக்கிறது. பின்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் கிளைக்கூட்டங்கள் நடைபெறும். நிறுவப்படவிருக்கும் இந்தச் சங்கம் 'தமிழ் தேசிய விவகார இலங்கைச் சங்கம்' (Ceylon Association for National and Tamil Affairs) என வழங்கப்படும்.

---

# புதுமெருகு பெற்ற புதுவருடப் பிறப்பு
## தேசிய தினமாகக் கொண்டாடப்பட்டது

தமிழ் சிங்கள புதுவருடத் தினமான நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் புத்தாண்டுக் கொண்டாட்டம் கோலாகலமாக நடைபெற்றது. ஆலயங்களில் விசேஷபூசைகள் இடம் பெற்றன.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவனியா. மலைநாடு கொழும்பு ஆகிய இடங்களில் தமிழர் மனையெலாம் புத்தாண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்றாண்டிலும் பார்க்க இவ்வாண்டு குதூகலமாகச் சகலரும் பங்குபற்றினர்.

புத்தாண்டைமுன்னிட்டு சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் விளையாட்டுப் போட்டிகள், ஆண்டுவிழாக்கள் நடைபெற்றன.

ஒவ்வொரு பொலிஸ் நிலயப் பகுதியிலும் தேசிய விளையாட்டுகள், நடனம், இன்னிசை போட்டிகள் பொலிசாரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

உத்தியோகத்தர்களில்பெரும்பாலோர் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காகத் தம் வீடு திரும்பியிருந்தனர். இதனால் வெள்ளிக்கிழமையும அதற்கு முதல்நாளும் போக்குவரத்துகள் அதிகமாக இருந்தது. வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்குவந்த யாழ்தேவியில் பிரயாணிகள் தொகை அதிகரித்திருந்ததனால் அதிகமானோர் நின்றவாறே பிரயாணஞ் செய்தனர். இதனால் வெளியில் நின்றுவந்த ஒரு வாலிபரின் காலில்மரமடித்து முறிவு ஏற்பட்டது. இச் சம்பவம் பொல்காவலையில் நடைபெற்றது. வேறு அசம்பாவிதமெதுவும் நடைபெறவில்லை.

யாழ்ப்பாணம் நாகவிகாரையிலும் விசேஷ வழிபாடுகள் நடைபெற்றன. பல இடங்களில் தேங்காய் அடிப் போர் நடைபெற்றது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற கதம்ப நிகழ்ச்சியில் சுமார் 400ாகலைஞர்கள் கலந்துகொண்டனர். இந்து—பௌத்த நடனங்களும் இடம்பெற்றன. நாட்டின் பல பகுதியிலும் தமிழர் சிங்களவர் ஒற்றுமைக்கு இது ஒரு நல்ல தினமாக அமைந்திருந்தது.

---

# பண்டிதமணியும் தர்மரத்ன தேரோவும் கௌரவிக்கப்படுவார்கள்

கொழும்பு, சனி

கொழும்பு நகரில் வரும் 28-ம் 29-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் பொது மகாநாட்டில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை கௌரவிக்கப்படவிருக்கிறார். இதற்கான ஏற்பாடுகளை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செய்துவருகிறது. பண்டிதமணியுடன் மணிமேகலையை தமிழிலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்த்துபுத்தகமாக்கியவண. தர்மரத்ன தேரோவும் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

இம் மகாநாட்டில் கவியரங்கம், கருத்தரங்கம், எழுத்தாளர் புகைப்படக் கண்காட்சி ஆகியனவும் இடம்பெறவிருக்கின்றன.

"மானிலம் பயனுற" என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறவிருக்கிறது. இதற்கு நவாலியூர் சோ. நடராஜன் தலைமை தாங்குவார். முருகையன், மகாகவி, அல்வாயூர் செல்லையா, நீலாவணன், புரட்சிக் கமால், கே. எஸ். நடராசா, இ. நாகராசன், திமிலைத்துமிலன், ராஜபாரதி ஆகியவர்கள் இக்கவியரங்கத்தில் கலந்து கொள்வார்கள்.

கருத்தரங்கத்தில் "இலக்கியம் எதற்காக" என்ற பொருள்பற்றி சர்ச்சை நடைபெறவிருக்கிறது. இதற்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளர் திரு. கே. கைலாசபதி தலைமை தாங்குவார்.

மகாநாடு கொழும்பு சகிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி சங்கம் செய்து வருகிறது.

---

## சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை, சனி.

புங்குடுதீவைச் சேர்ந்த சிவலைப்பிட்டி வட்டார சனசமூக நிலையத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- திரு. என். கே. கணபதிப்பிள்ளை, உப-தலைவர் திரு. சி. சின்னையா, இணைக்காரியதரிசிகள் திரு. எஸ். குணரத்தினம், திரு. சி. மகாலிங்கம், தனாதிகாரி, சோ. இராமலிங்கம்.

திரு. வி. வடிவேலு விளையாட்டுப்பகுதித் தலைவராகவும், திரு. வை நாகேசு கலைப்பகுதித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

---

## யாழ்ப்பாணத்தில் ஸ்ரீராமநவமி விழா
## "மகாத்மா காந்தி ஒரு புதிய அவதார புருஷர்"
### —நீதிபதி தனபாலசிங்கம்

"தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும் போது பகவான் அவதரிப்பதாக கீதையில் தெரிவித்தார். ஸ்ரீராமர் அவதரித்ததும் அதே நோக்கத்துக்குத்தான். இன்றுள்ள உலகநிலையில் மீண்டும் தர்மத்தைக்காக்க மற்றோர் அவதாரம் வர வேண்டும். மகாத்மா காந்தியை ஓர் அவதாரமென்றே நான் கருதுகிறேன். அப்படியில்லாவிட்டாலும், உலகம் உய்ய மற்றோர் அவதார புருஷர் சீக்கிரம் வர வேண்டியுள்ளது."

என்றிவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. தனபாலசிங்கம், சென்ற வெள்ளியன்று, பெருமாள் கோவில் முன்றலில், திவ்யஜீவனசங்கத்தின் ஆதரவில், நடைபெற்ற ஸ்ரீ ராம நவமி விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர். கோவில் பூசைக்குப் பின் செல்வி யோகேஸ்வரி ராசையாவின் பஜனையுடன் விழா ஆரம்பமாயிற்று. ஸ்ரீசீதாராம சாஸ்திரிகள், ராம ஜனனம், ராம நாம மகிமை இவை பற்றி நல்லதோர் உபந்நியாசம் செய்தார். சுவாமி சுப்பிரமணியானந்தா, ஸ்ரீ கே. பி. ஹரன் இவர்கள் பேசியபின், திரு.சிவஞானம், செல்வி யோகேஸ்வரி இவர்கள் பக்திப்பாடல்களுடன் விழா இனிது முடிந்தது.

# மகளிர் மன்றம்

## நாகரிக உலகிலும் பதிவிரதைகள் உள்

### அவர்களைப்பற்றியும் கவிதை எழுதலாமல்லவா ?

— 'கௌரி' —

"......இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே"

ஏதோ பழைய பாட்டொன்றின் அடியாக இருக்கிறதே! அதுவும் கட்டுரையின் ஆரம்பத்திலேயே என்று, வாசிப்பதை நிறுத்திவிடாதீர்கள். நாகரீக உலகின் நிலைமைகள் எல்லாம் மாறிக் கொண்டு போகின்றன. ஆனாலும் மனிதருக்கிடையே உள்ள அன்பு உணர்ச்சிகளும் உறவுகளும் என்றுமே ஒரு மாதிரியாகத்தான் இருந்துவிடுகிறது. எத்தனை மாற்றங்கள்தான் ஏற்பட்டு மறைந்தாலும், தாய் பிள்ளை, கணவன் மனைவிமார்களுக்கிடையே உள்ள அன்பும் விசுவாசமும் எப்படியோ இருக்கத்தான் செய்கிறது. போட்டிகள் பூசல்கள் எத்தனைதான் வந்தாலும், இந்த உறவுகள் உறவுகளாகத்தான் இருக்க முடியும் போலும்! இப்படியெல்லாம் சுற்றி வளைத்து எழுதுவதற்கு அன்றொரு நாள் என்னுடைய பழைய நண்பி கீதாவை நான் சந்தித்துப் பேசிக்கொண்டதுதான் காரணம். அவள் கூறிய ஒரு சில வார்த்தைகள்தான் பழைய பாட்டின் அந்த அடிகளை எனது நினைவுக்குக் கொண்டு வந்தன.

"முளிதயிர் பிசைந்த காந்தள்
மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது
உடீஇ
குவளையுண்கண் குய்ப்புகை
கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப்
பாகர்
இனிதெனக் கணவன் உண்ட
லின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே"

இதுதானே அந்தப் பழைய பாட்டு. இதன் கருத்து...!

பிறந்த வீட்டிலிருந்து செவிலித்தாயானவள் மகளைப் பார்க்கப் புறப்பட்டாளாம். தான் வளர்த்த மகள் இல்லறம் நடாத்துவதைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பிச்சென்று பெற்ற தாயிடம் மகளின் நலன்களைக் கூறினளாம். செவிலித்தாய் பெற்றதாய்க்கு மகளைப் பற்றிக் கூறும் செய்திகள்தான் இந்தப்பாட்டில் உள்ளன.

"அம்மா! ஒருநாள் சமையலறையில் தடல்புடலாக வேலை நடந்தது. நானும் அவதானித்தேன். உன் மகள், தன் அழகான காந்தள் மலரின் இதழ்களைப் போன்ற விரல்களால் தயிர் பிசைந்தாள். அதே சமயம் புளிப்பாகுக்கு வேண்டிய தாளிப்பு அடுப்பில் இருந்தது. தாளிப்பு வெடிக்கத் தொடங்கி விட்டது. புளிப்பாகைத்தாளிப்பில் சேர்க்கவேண்டிய நேரத்தில் மகள் உடுத்தியிருந்த தூய ஆடை சிறிது நெகிழ்ந்து விட்டது! தயிர் பிசைந்த கை கழுவிக்கொண்டு ஆடையைச் சொருக நின்றால், தாளிதம் பதம் கெட்டுவிடும். கணவனின் உணவு கெட்டுவிட மனமில்லை அவளுக்கு. கணவரின் இன்பத்துக்குமுன் ஆடை ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. கையைக் கழுவாமலே நெகிழ்ந்த ஆடையை உடுத்திக் கொண்டாள். புகை கண்ணைத் தாக்குவதையும் பாராது வேலையை முடித்தாள். கணவன் வந்ததும் உணவு பரிமாறினள். அன்புடன் படைத்த இனிய புளிப்பாகை 'இனிது' 'இனிது' என்று கூறிக்கொண்டே கணவன் உண்டான். அந்தநேரத்தில் மகள் அடைந்த மகிழ்ச்சியை நான் எவ்வாறு தாயே கூறுவேன் ?"

பழைய தமிழ் பெண்ணின் பண்பாடு தமிழ்ப் புலவர் ஒருவர் பாடிய இந்தப் பாட்டால் விளங்குகின்றது. என் நண்பி கூறிய சில வார்த்தைகள் எனக்குச் சிறிது ஆர்வத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின.

நாகரீக உலகில் நாகரீக வளர்ப்பில் வளர்ந்த கீதா, பி. ஏ. வரை படித்திருந்தாள். படித்த பெண்கள் சரியாகக் குடும்பம் நடாத்த மாட்டார்கள் என்று ஏதோ ஒருசிலர் பிதற்றினும் தூற்றல்களுக்கு எதிர்மாருகக் கீதாதன் குடும்ப வாழ்க்கை நடாத்துவதைக் கண்டு என் இதயம் பூரிக்கின்றது. படித்தபெண் என்று கீதா சிறிதளவேனும் பெருமை கொண்டதாக எதுவிதத்திலும் காட்டிக்கொள்வதில்லை. தன் கணவன் பெரிய உத்தியோகஸ்தனாக இருந்தபோதும் தான் பெரிய செல்வன் வீட்டுப் பிள்ளையாக இருந்தபோதும்கூடத் தனது வீட்டுச் சமையல்களைத் தானே செய்து வருகிருளாம். இதை அவள் என்னிடம் கூறியபோது எனக்குச் சிறிது ஆச்சரியமாகவுமிருந்தது. விவாகஞ் செய்து குடும்பவாழ்க்கையில் இறங்கியபின்னர் அன்றுதான் முதல் தடவையாக நாம் இருவரும் சந்தித்தது. எல்லாவகையிலும் சந்தோஷமாகத்தான் இருப்பதாகத் தெரிவித்த கீதாவுக்கு ஒரு கவலையும் கூடத்தான் இருந்தது.

என்ன செய்வது கௌரி. ஏதோ எனக்கும் கடவுள் ஒரு கவலையைவிட்டுத்தான் இருக்கிருர் என்ருள். சிறிது வியப்புடன் என்ன கவலை கீதா சொல்லக்கூடாதா என்றேன். சற்று வெட்கத்துடன்தான் கூறினள்.

"கௌரி! எனக்கோ விதம் விதமான உணவுகளைக் கணவருக்குச் செய்துகொடுப்பதில் அலாதி பிரியம். எவ்வாறெல்லாமோ பழகிக்கொண்ட நல்ல உணவுகளையெல்லாம் செய்து வைப்பேன். ஆனால் என் கணவருக்கோ அவற்றையெல்லாம் நேரத்துக்கு வீடுவந்து ஆறுதலாக உண்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. உனக்குத்தானே தெரியுமே "சார்க்குயிட்" ஆபீசர்களின் ஓயாத வேலைபற்றி.

"சுவையானஉணவு, ஜோராயிருக்கு" என்று சொல்லிச் சாப்பிடுவார். ஆனால் ஆறுதலாகச் சாப்பிடுவது அருமையாகத்தான்" என்று ஒரு பெருமூச்சுடன் சொல்லிமுடித்தாள்.

நாகரீக உலகிலும் நவீன வாழ்க்கையிலும்கூட அவளுடைய பதிபக்தியின் தன்மை இவ்வளவு சிறந்து மிளிர்வதையிட்டுச் சந்தோஷப்பட்டேன். நான் படித்த தமிழ் இலக்கியம் எனது சிந்தனையையும் சிறிது கிளறிவிட்டது. உடனேயே "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்...." என்னும் அடிகள் நினைவுக்கு வந்தன.

கீதாவின் கவலையைப் போக்க ஒரு ஆறுதல் கூற வேண்டுமே என்று என் அக்காள் கணவரைப் பற்றிய செய்தியொன்றை அவளுக்குத் தெரிவித்தேன்.

கீதாவின் கவலைபோல என் அக்காளுக்கும் ஒரு கவலை. எத்தனை ருசியான உணவு சமைத்துப் பரிமாறினலும் சாப்பிட்டுவிட்டுப் பேசாமலே எழுந்து போய்விடுவாராம் என் அக்காள் கணவன். "சாப்பாடு ஜோரு" என்று சொல்லாரோ என்று ஏங்கியபடியே அக்காள் இருப்பாளாம்.

'இனிது' என்றுகூறி மகிழாத கணவர்களும் உண்டு என்று சொல்லிச் சிரித்தேன் கீதாவும் சிரித்தாள்.

கீதா சென்றதும் அன்றைய பெண்ணைப் பாடியதுபோல நாகரீக பதிவிரதைபற்றி ஒரு புலவர்களும் கவிதை இயற்ற மாட்டார்களா என்று ஏங்கியது என் நெஞ்சம்,

# அழகு மேடை

'ஜரீன் ரஞ்சிதம்'

## 'குட்டி' விஷயங்கள்

கிரீமுகளும் முக வசிகரமும் பற்றி சென்ற அழகு மேடையில் கூறியிருந்தேனல்லவா? முகம் மட்டும் வசீகரமாக இருந்து விட்டால் போதாது. அப்படித்தானே? நாம் கவனிக்க வேண்டிய குட்டிவிஷயங்கள் சில இருக்கின்றன. சிறிதாகவிருந்தாலும் வசீகர தோற்றத்தையும் கௌரவத்தையும் பொறுத்தவரை இவை முக்கியம் வாய்ந்தவை. எமது சிறு அவதானக் குறைவினல் இவை அழகைக் கெடுப்பதோடு மரியாதைக் கேட்டையும் உண்டாக்கி விடுகின்றன.

### கைகளும் நகங்களும்

எமது கைகள் பிறரது பார்வைக்கும் அவதானத்திற்கும் தெற்றெனப்பட்டு விடுகின்றனவல்லவா? பெண்களின் கைகள் இயற்கையாகவே அழகானவைதான். எனினும், சமையல் வேலைகள் தையல் வேலைகள் செய்யும் நாம், கவனக் குறைவாக இருந்தால் கைகளின் அழகு கெட்டுவிடலாம். எந்த அளவுக்கு வேலைகள் செய்தாலும் கைகளை மிருதுவாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளலாம். சிறிது கவனம்தான் அவசியம். சமையல் வேலைகள் முடிந்தவுடன் கைகளை இளஞ்சூடான நீரில் நன்கு கழுவித் துடைத்துக் கொண்டு சிறிது 'லோஷன்' (Lotion) அல்லது கிரீம்போட்டுத் தடவிக்கொள்ளவேண்டும். சமையலறையிலேயே ஒரு போத்தல் 'லோஷனை' வைத்துக் கொண்டால் சோர்வின்றி கை கழுவிய உடனேயே லோஷனைப் போட்டுக் கொள்ளலாம். பாத்திரங்களைக்கழுவ உபயோகிக்கும் 'விம்' (Vim) ஏஜக்ஸ் (Agax) புளி போன்ற சுத்தி சாதனங்கள் கைகளிலே அதிகம் படிந்து ஊறிக்கொள்ளாத வகையில் வேலையை முடிக்கவேண்டும். இந்தப் பொருட்கள் ஊறிக்கொள்வதால் கைகளின் மிருதுவான தன்மை கெட்டு விடும்; ஆண்களின் கைகள் போன்று தடிப்பாக இல்லாது மிருதுவாக வளைந்து கொடுக்கும் கைகளே அழகு. நாட்டியம் பழகும் பெண்களின் கைகளும் விரல்களும் இருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா. மணிக்கட்டின் கீழ் கைகள் நெளிந்து வளையக்கூடியனவாக இருப்பதில் ஒரு தனி அழகு உண்டு. இதற்கு ஒரு சிறு அப்பியாசம் கூறவா? இதோ...

உங்களுடைய கைகளை தலைக்கு மேலே நன்ருக உயர்த்திக்கொண்டு உள்ளங்கைகளையும் விரல்களையும் கீழ்ப்புறமாகத் தொங்கப் போடுங்கள். அதே போலக் கையைக் கீழே தொங்கப் போடும்போது மணிக்கட்டுடன் உள்ளங்கையையும் விரல்களையும் மேற்புறமாக உயர்த்திப்பாருங்கள். இவ்வாறு தினமும் சில தடவைகள் அப்பியாசம் செய்வதால் கரங்கள் நல்ல அழகைப்பெற்று விடுகின்றன.

கைகள் மிருதுவாக இருப்பதற்கு 'லோஷன்' தடவும் போது முழங்கை குதிக்கால் ஆகியவற்றுக்கும் தடவிக்கொள்வது நல்லது. இவை தடிப்பாக இருப்பதையும் தடுத்துக் கொள்ளலாம்

நகங்கள் நீளமாக வளர்க்கப்பட்டு அழகாக வைத்திருக்கப்படாவிட்டாலும், அழகாக வெட்டப்பட்டுச் சுத்தமாக வைத்திருக்கப்படல் வேண்டும். நீண்ட விரல்கள் அழகாக இருப்பது போலவே நீண்ட நகங்களும் அழகாக இருக்கும். ஆனால் வீட்டு வேலைகளில் அதிகம் ஈடுபடும் பெண்கள் நீளமான நகங்களை வைத்திருக்கமுடியாது. குளிக்கும் வேளைகளில் நகத்தின் புறமாக ஒட்டியுள்ள தோலைப் பின்புறமாக அழுத்திக்கொண்டு வந்தால் நகம் தானகவே நீட்டிவிடும். கூர்மையான நகங்களை நீட்டுவதிலும் இந்த உபாயம் சிறந்தது. நகங்களுக்குப் 'பாலிஷ்' (Cutex) பூசுபவர்கள் தமது சருமநிறத்துக்குப் பொருத்தமான நிறத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இயற்கையான நிறமுள்ள நகப் 'பாலிஷ்' தான் கைவிரல்ளுக்கு ஆடம்பரமில்லாத அழகைக் கொடுக்கும்.

உடையலங்காரம், சிகையலங்காரங்களைப் பிரமாதமாகச் செய்து விட்டாலும் அழுக்குப் படிந்த அலங்கோலமான கைகள் மானதத்தையே வாங்கி விடும் அல்லவா?

### பவுடர்கள் கவர்ச்சி வேண்டாம்!

முகப்பவுடர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவற்றின் மணம் பற்றியும் குணம் பற்றியும் அவதானமாக இருப்பது நலம். அளவுக்கு மிஞ்சிய வாசனையுள்ள பவுடர்களைப் பாவிப்பது புத்தியல்ல. அதிக வாசனையை நம்முடன் பழகும் ஒரு சிலர் சகித்துக்கொள்ள முடியாமலிருக்கலாம். அத்தோடு அதிக வாசனையால் ஏனையோரின் கவனத்தைக் கவருவதாகவும் முடியும். மெல்லிய வாசனையுடைய பவுடர் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது தான் புத்திசாலித்தனம். பவுடர் எவ்வளவுக்கு மென்மையானதாக இருக்கிறதோ அவ்வளவிற்கு நீடித்த நேரம் சருமத்தில் நின்று பிடிக்கும்.

### 'சென்டுகள்'

அதிகம் வியர்த்துக்கொட்டுபவர்கள் ஸ்பரிசமான மெல்லிய மணமுள்ள செண்டு ஒன்றை உபயோகத்தில் வைத்திருப்பது நல்லது. வியர்வை மணம் ஏனையோருக்குப் படாதபடி பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஈழப்பாட்டனின் கடிதங்கள்

## டி. எஸ். சேனநாயக்காவின் மாபெருந்தவறு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மானது என்பதைக் கருத்திற் கொண்டிருப்பாராயின், எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவே அவரின் அடுத்த நேரடி வாரிசுவாகப் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றிருப்பார். 1947-48-ம் ஆண்டில் மந்திரி சபையில் அனைவரும் பேசி முடிவு செய்ததன் பிரகாரம் அந்த "எண்ணத்தையும் நோக்கத்தையும்" டி. எஸ். அணுவும் பிசகாமல் நியாயமாகவே நிறைவேற்றி நடந்திருப்பின். 1952-ம ஆண்டிலிருந்து, இலங்கைச் சரித்திரமே, முற்றிலும் குறுக்கு வழியில் குதிக்காது, நல்ல சமாதானமானதொரு பாதையில் சென்று முடிந்திருக்கும்.

தார்ஸி வித்தாச்சியும் தனது "அவசரகாலநிலைமை 58" என்னும் நூலை எழுதிப் பிரசித்தம் பெற்றிருக்க முடியாது! அவர் தனது நூலின் இறுதியிற் குறிப்பிட்டுள்ளபடி "வழிபிரிதல்" அதாவது, பாதைப்பிளவு மனேபாவம் என்றும் நிகழ்ந்திருக்க முடியாது.

ஸ்ரீமதி, ஸ்ரீமாவோ-பண்டாரநாயக்காவும இலங்கையின் பிரதம மந்திரியாக வருவதென்பது கனவிலும் நிகழ்ந்திருக்காது. இப்போது, இலங்கையில் ஜனநாயகம் "வாழ்விழந்த ஜனநாயகம்" ஆக வந்திருக்காது!

### பாசமும் மோகமும்

ஒன்று புத்திரபாசம்; மற்றையது பதவிமோகம். இரண்டும் சுயநலத்தின் இருவேறு கோணங்களே தான். பொது நலத்தை, மக்கள் முன்னேற்றத்தை, நாட்டின் நன்மையைக் கருத்தில் கொண்டிருப்பின் குடும்பக் கௌரவமும், சுய கௌரவமும் ஒரு தூசாகவல்லோ தென்படும். தேச பக்திக்கு நிகராக வேறு எந்த உணர்ச்சிப் பிரவாகமும் எதிர் நிற்கமுடியுமா? அதிகார, பதவிப்பித்தினல் கடமையிலும் நேர்மையிலும் தவறிவிடுகின்றனர் பலர்! பலவித பேச்சுத்திறமையினலும், கபடவேஷ நடைமுறைகளாலும், அவற்றையெல்லாம் அகத்தே போர்த்து மூடி, மக்களை ஏமாற்றி நாட்டை நலியச்செய்வோரை என் செய்வது! என்னென்றுரைப்பது!!!

சுதந்திரம் அடைதல் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை விட மந்திரிசபையில் தர்க்கத்திற்கும், அபிப்பிராயபேதத்திற்கும் உரிய வேறு பல விடயங்களும் விவாதிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை தேசியக் கொடிப் பிரச்சினை, இந்திய-இலங்கையர் பிரச்சினை, பிரஜாவுரிமைச் சட்டம் என்பனவாம். இவ்விடயங்கள் பற்றி, மந்திரிசபையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்ட போதிலெல்லாம் ஒலிவர் குணத்திலக்கா அவற்றில் அவ்வளவு விசேடமான அல்லது முக்கியமான பங்கொன்றும் எடுக்கவில்லை. ஆனால், பேச்சு வார்த்தைகள் சிறிது வேகமடைந்து புயலாக தீவிரமடையாவண்ணம் இடையீடு செய்து சாந்திப்படுத்துவார். தீப்பொறி அணைக்கும் நீர்த்துளியாகவே இருந்தார் ஒலிவர். 'சண்டமாருதப்பறவை" எனவே என்னை மற்ற மந்திரிகள் கூறினர்கள்.

### உற்பத்திப் பொருள் ஒப்பந்தம்

சோல்பரி அரசியல்திட்டம் அமுலுக்கு வரமுன்னரும்,

(11ம் பக்கம் பார்க்க)

# நாடு நலம் பெற . . .

# மண் வளம் நீர்வளம் பாதுகாத்தல்

**வளம் பொருந்திய தரையில் பயிரீடப்படும் பயிர் அதிக பலனைக் கொடுத்தல் போலச் செழிப்பற்ற தரையில் பயிரீடுதல் குறைந்த பலனைத் தரும். நாடு வளம்பெற மண்வளம் நீர்வளம் பாதுகாக்கப்படல் வேண்டும். வரண்ட யாழ்ப்பாணம் வளம்பெற இம்முயற்சி உடனடியாகக் கவனிக்கப் பட வேண்டும்.**

இந்நாட்டின் பொருளாதாரம் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. நாட்டின் சனத்தொகையிற் பெரும் பகுதியினர் விவசாயப் பொருளுற்பத்தியிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். விவசாயமே தேசிய நிதிக்கும் பிரதான ஊற்றாயமைவதையும் நாம் அறிவோம். கைத்தொழிலுற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் வேண்டிய மூலப்பொருட்களை விவசாயத்தின் மூலமாகப் பெறவேண்டியிருப்பதால், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய அபிவிருத்தியே முதலிடம் பெறவேண்டும்.

ஒரு நாடு இயங்குவதற்கு விவசாயத்திலே தங்கியிருத்தல் போல், விவசாயத்திற்குத் தரை மிகவும் இன்றியமையாதது. பயிர் தரையிற்செய்யப்படுதலால் அதன் தரம்தரையின் வளத்திலேயே தங்கியுள்ளது. மிகவும் வளம் பொருந்திய தரையிற் பயிரிடப்படும் பயிர் அதிக பலனைக் கொடுத்தல் போலச் செழிப்பற்ற தரையில் பயிரிடுதல் குறைந்த பலனைத் தரும்.

## தரை உற்பத்தி

தரை உற்பத்தியாவதற்குப் பல நூற்றாண்டுகள் சென்றிருக்கின்றன. கற்பாறைகள், காற்று, மழை, சூரிய வெப்பம் முதலியவற்றால் தாக்குண்டு சிறுசிறு பகுதிகளாக நொறுங்கிச் சிதைவுறுகின்றன. மரஞ்செடி கொடிகளாலும், மிருகங்களாலும் விடப்பட்ட கனிசப் பொருள்கள் இச்சிறு பகுதிகளுடன் கலத்தலால் மேற்றரை உருவாகின்றது.

தாவர வளர்ச்சிக்கும் போஷணைக்கும் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான பகுதி மேற்றரையேயாகும். இம்மேற்றரை ஒருசில அங்குலத் தடிப்பிற்றான் அமைந்துள்ளது. மேற்றரை தாதுப் பொருள்களிற் கொழுமை அடைந்திருக்குமாயின் அத்தரை தாவர போஷணையிலும் செழுமையாயிருக்குமென்பதற்குச் சற்றும் ஐயமில்லை. ஆதலால், தரையின் மேற்பகுதியே மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாகும். வளம் பொருந்திய இம்மேல் மண்ணை நீரோட்டத்தினலும், காற்றினலும் இழக்க நேரிடும். வெளியில் அதாவது மரஞ்செடிகளற்ற நிலத்தில் மழை பெய்யும் பொழுது நீர் மண்ணையரித்து வாரிச செல்லும். தரையின் சரிவுத்தன்மை அதிகரிக்க நீரோட்டமதிகரித்து, மண்ணரிப்பும் அதிகரிக்கும். மண்ணரித்தல் கூடுதலாகவிருக்கும் பொழுது ஆயிரக்கணக்கான தொன் மண்ணை மேற்பரப்பில் இழத்தல் கூடும்.

மண்ணரிப்பினல் தரையின் வளத்தை இழப்பதோடு வேறு பல நட்டங்களும் ஏற்படக் கூடும். மலைநாடுகளில் மலைச் சாரல்கள் சரிந்து விழக்கூடும். அப்படி விழும்பொழுது வளம் பொருந்திய மண்ணுடன் தரையிலுள்ள பாறைகளையுமிழக்க நேரிடும். மண்ணரித்தல் அதிகரித்தால் குளங்கள், வடிகால்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் முதலியன மண்ணல் நிரவி மூடப்பட்டு நீரோட வழியின்றி வெள்ளப்பெருக்கு எடுக்க நேரிடும். வெள்ளப்பெருக்கெடுக்காமல் தடுப்பதற்கு இவ்வண்ணம் மூடப்பட்டிருக்கும் குளங்களையும், வாய்க்கால்களையும் சதாகாலமும் சுத்தஞ்செய்து, ஆழத்தைக் கூட்ட வேண்டும். இப்படிச் செய்வதில் மிகவும் அதிக பணஞ் செலவாகும். எல்லோரும் தத்தம் நிலத்தை மண்ணரிப்பினின்றும் காப்பாற்றுவார்களாயின் இப்பெரிய பணச்செலவைச் செய்யவேண்டிய சந்தர்ப்பம் நேரிடாது.

இயற்கையில் நிலம் மண்ணரிப்பினின்று ஓரளவிற்குப் பாதுகாக்கப்படுகிறது. சூரிய வெப்பம், மழை, காற்று முதலியவற்றின் தாக்குதலினின்று, நிலத்தில் வளரும் மரம் செடி, கொடிகள் மண்ணைப் பாதுகாக்கின்றன. மரஞ் செடி, கொடிகள் நிறைந்துள்ள நிலங்களில் மழை பெய்யும்போது மழைத்துளிகள் மண்ணில் விழும் வேகத்தையும், நீரோடும் வேகத்தையும் குறைக்கின்றன. இவை மண்ணிற் போதியளவு தாதுப் பொருள்களையீன்று நிலவளத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

ஆனல், செயற்கை முறையில் நாம் பயிரிடும் பொழுது மரஞ் செடி, கொடிகளை வெட்டி நிலத்தை உழுவோம். அப்பொழுது மூடிப் பாதுகாக்கப்பட்டிருந்த மண்ணின் மேற்பரப்புச் சூரிய வெப்பத்தினலும், மழையினலும் இலகுவில் தாக்கப்படக்கூடிய தன்மையை அடைகிறது.

## நீர்வளம், மண்வளம் பாதுகாத்தல்

தரையின் நீர்வளத்தையும், மண்ணையும் பாதுகாக்கப் பல முறைகளைக் கையாள முடியும். இம்முறைகளை இருபாகங்களாகப் பிரிக்கலாம்.

அவையாவன: (i) சாகுபடி முறைகள். (ii) செயற்கைத் தடைகள். நீரோடும் வேகத்தைக் குறைக்கும் முறைகள். சம உயரக் கோட்டுமார்க்கமாகப் பயிரிடுதலும், சம உயரக் கோட்டுமார்க்க உழுதலும், சம உயரத்தில் பயிரிடும்பொழுது வரிசையில் நடும்பயிர்களாகிய சோளம், பருத்தி முதலியவற்றையும் நிலத்தை மூடிச் செழித்துவளரும் பயிர்களான பயறு, நிலக்கடலை முதலியவற்றையும் கலந்து நடுதல் மிகவும் நன்று.

நிலத்தில் நிலமக்கை (Humus)க் கூட்டும் முறைகளைக் கையாளுதல் மண்ணரிப்பைத் தடுப்பதற்கு மிகவும் சிறந்த முறையாகும். தரையில் நிலமக்கு அதிகமாக இருத்தல் பெய்யும் மழை நீரை ஓடாது உறிஞ்சிக்கொள்ளக்கூடிய சக்தியை அளிக்கிறது. பஞ்சு எவ்வண்ணம் நீரை உறிஞ்சுகின்றதோ அவ்வண்ணமே நிலமக்கும் நீரை உறிஞ்சுந்தன்மையுள்ளது. நிலமக்கைக் கூட்டும் முறைகளாவன: கால் நடை எரு, கழிவு எரு (Compost) இலைகுழை என்பன இடுதல், பட்டி அடைத்தல், கலப்புப் பயிர் நடுதல், மாற்றுப் பயிர் செய்தல் முதலியனவாம். மண்ணரிப்பை அதிகரிக்க மூல காரணமாயிருப்பது ஓடும் நீரேயாகும். பெய்யும் மழை நீர் தரையில் வேகமாக ஓடாதிருப்பின் மண்ணரிப்புக் குறைவாயிருக்கும். செயற்கைத் தடைகளை இடைவெளிகளிவிட்டு நீரோடும் வேகத்தைக் குறைக்கமுடியும். வடிகால்கள், வரம்புகள், கற்படிகள், மட்டப் படிகள் போன்ற செயற்கைத் தடைகளை உபயோகிக்கலாம்.

மண்ணரித்தலும், நீர் சேமித்தலும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய சம்பந்தமுடையன. நீரையோடவிடாமல் தடுத்துச் சேகரித்தால் மண்ணரிப்புக் குறையும். அதிக மழைபெய்யும் பிரதேசங்களில் நீர்சேமித்தலிலும் பார்க்க, நீர் மண்ணை அரிக்காமல் ஓடச் செய்தலே மிகமுக்கியம். ஆனல் மழை குறைவான பிரதேசங்களில் பெய்யும் மழையை நிலத்தினுட் செறியவிடுதல் உசிதம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழை மூன்று அல்லது நாலு மாதங்களுக்கே பெய்யும். ஆதலால் இம்மாதங்களில் பெய்யும் மழைநீரை நிலத்திலூறவிடுதல் மூலம் சேகரித்துவைத்தல் அத்தியாவசியம். ஏனெனில் இக்குடாநாட்டில் நிலத்தில் சேகரிக்கப்பட்ட நீரையே மழையற்ற மாதங்களில் உபயோகிக்க நேரிடுகிறது. ஆறுகளும், நீரோடைகளுமற்ற இப்பாகத்தில் நிலத்திலே சேகரிக்கப்பட்டிருக்கும் நீரை, கிணற்று நீர்ப்பாய்ச்சல்மூலம் விவசாயிகள் தமது பயிர்கட்கும், மக்கள் தமது நாளாந்த தேவைகளுக்கும் உபயோகிக்கின்றனர்.

மழைநீர் நிலத்திலூறிக் கற்பாறைமேல் தங்கிநிற்கின்றது. இதுவே கிணற்று நீராகும். ஆகலால், மழைநீர் நிலத்தினுட் செல்லாது வெளியேஓடிக் கடலிற் சேருமாயின் கிணறுகளில் நீர் குறைவாகிச் சிறிது காலத்தில் நீரற்றுப்போய் விடநேரிடும். ஜனத்தொகை அதிகரிப்பினல் இக்குடாநாட்டில் முற்காலத்திலும் பார்க்க அதிக கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான முறைகளில் இயந்திரங்களால் நீர்ப்பாய்ச்சல் செய்வதால் முன்னிலும் பார்க்க அதிகமான நீரை இறைக்க முடிகின்றது. கிணறுகள் அதிகரித்த காரணத்தாலும், இயந்திரங்கள் அதிகமாக உபயோகிப்பதன் காரணத்தாலும், இப்பொழுது முன்னிலும் அதிக நீரிறைக்கப்படுகின்றது. நீரை அதிகமாக இறைக்கும்பொழுது மேலே எடுக்கிற அதேயளவு நீர் நிலத்தினுட் செல்லாவிட்டால் மிகவும் இலகுவில் கிணறுகள் நீரற்றுப்போகக்கூடும். இந்நிலையேற்பட்டால் பயிர்கட்கு நீரற்றுப்போவதைவிட, மனித ஜீவியத்திற்கே நீரில்லாமலிருக்க நேரிடும்.

ஆதலால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீரைச் சேமித்தல் மிகவும் முக்கியமான ஒரு விஷயம். இந்நாட்டில் பெய்யும் மழையை வாய்க்கால்கள் வழியே கடலுக்குச் செல்ல

(11ம் பக்கம் பார்க்க)

# பழங்களை பயன்படுத்தும் வழி

— செல்வி. கே. தங்கவேலு —

(பெண் விவசாய உத்தியோகத்தர்)

**இலங்கையிலுள்ள பழங்கள் பலவகையான பாணிவகைகளும், பழரசங்களும் தயாரிப்பதற்கு உகந்தவை. இவைகளில் பெரும்பாலானவை குறிப்பிட்ட சில காலங்களில் மட்டும் கிடைக்கக்கூடிய பழங்கள். இவற்றின் பிரயோசனங்களைப் பாணியாகவும், ரசமாகவும் தயாரித்து வருடமுழுவதும் பயன்படுத்திக் கொள்ளலாம். சுயதேவையுடன் இலாப நோக்கத்தோடும் இம் முயற்சியை குறுகிய முதலுடன் மேற்கொள்ளலாம்.**

இலங்கையிலுள்ள பல வகையான பழங்கள் பாணிவகைகளும், பழரசங்களும் தயாரிப்பதற்கு உவந்தவை. இப்பழங்களிலிருக்கும் புளிப்புத் தன்மை பாணிகள் செய்வதற்கு மிக முக்கியமானது. பாணிவகை செய்வதற்கு ஏற்ற பாத்திரங்கள் மண்ணல் அல்லது அலுமினியத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும் வெண்கலம் அல்லது செம்புப் பாத்திரங்கள் ஈயம்பூசப்பட்டனவாயின்விலக்கப் படக்கூடியனவல்ல.

## பழப்பாகு (JAM)

நன்ருக முற்றிப் பழுத்த பழங்களைக் கழுவின பிறபாடு தோலைச்சீவி விதைகளை நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி நிறுத்தபின் போதியளவு தண்ணீர் விட்டு நன்ருக அவியவிட வேண்டும். நன்கு அவிந்ததும் கடைந்தெடுக்கவேண்டும். புளிப்புத்தன்மை குறைந்த பழமென்றல் ஒரு இருத்தலுக்கு ஒரு எலுமிச்சம் பழத்தின் சாறு அல்லது 1/2 தேக்கரண்டி சிற்றிக் அசிட் (Citric Acid) சேர்த்து அவியவிடவேண்டும். கடைந்தெடுத்த பாகத்தோடு 1 இருத்தல் பழத்திற்கு 3/4–1 இருத்தல் சீனி கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவேண்டும். காய்ச்சும்போது பொங்கினல் இரண்டொரு துளி நல்லெண்ணெய் விட்டால் பொங்குவது குறையும். பாணிப்பதம் வந்ததும், பாகத்தையிறக்கி உடனேயே சூடான போத்தல்களிலிட்டு வெள்ளை மெழுகு உருக்கிப் பாணிக்கு மேல் ஊற்றிக் காற்றுப்போகாமலிருக்கக் கூடிய மூடிகளால் மூடவேண்டும். அப்படியான மூடிகள் கிடைக்காவிட்டால் மெழுகு ஊற்றமுன்பு சிறிதளவு சோடியம பென்சோஷட் (Sodium Benzate) தூவிச் சாதாரணமான மூடிகளால் மூடலாம். இம்மருந்து பூசனம் பூப்பதைத் தடுக்கின்றது.

## கனியிரசம் (JELLY)

இது தயாரிக்கும் முறையும் பழப்பாகு போலத்தான். தண்ணீர் விட்டு அவித்துக்கடைந்தெடுத்த பாகத்திற்குப் பிறகும் (ஒரு இருத்தலுக்கு ஒரு பைந்து) தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து 10 நிமிடம் கொதிக்கவிடவேண்டும். பின்னர், ஒரு மெல்லிய துணியில் வடித்து ஒரு பைந்து சாற்றுக்கு 3/4—1 இருத்தல் சீனி கலந்து காய்ச்சிப்பாணிப்பதம் வந்ததும் இறக்கிப் பழப்பாகைப் போலப்போத்தலிலிட்டு அடைக்கவேண்டும்.

## பழப்பானம் (CORDIAL)

பழச்சாறும், சீனியும் கலந்த உணவுபழப்பானம்எனப்படும். இது புளிக்காமலிருப்பதற்குப் பாதுகாக்கும் மருந்து (Sodium or Potassium Metabisulphite) சேர்க்கவேண்டும்.

நன்ருக முற்றிப்பழுத்த பழங்களைக் கழுவினபிறகு சாற்றைப் பிழிந்து ஒரு போத்தல் சாற்றுக்கு 1 இருத்தல் 2 அவு. சீனி கலக்கவேண்டும். புளிப்புத்தன்மை குறைந்த பழமென்றல் ஒரு போத்தல் சாற்றுக்கு 2 எலுமிச்சம்பழத்தின் சாறு அல்லது 1/2 தேக்கரண்டி சிற்றிக் அசிட் சேர்க்கவேண்டும். சீனி கலந்தபிறகு ஒருமெல்லிய துணியில் வடித்துப் பாதுகாக்கும் மருந்து ஒரு போத்தல் சாற்றுக்கு 1/48 அவு. அல்லது 1/8 தேக்கரண்டி கலந்து சுத்தமான போத்தலிலிட்டுத் தக்கையால் மூடி அதனை மெழுகால் மூடவேண்டும். தக்கையைக் கொதி நீரில் அவித்தெடுப்பது நன்று. இதனல், அதிலிருக்கும் கிருமிகள் பழரசத்தை புளிப்படையச் செய்வதைத் தடுக்கலாம்.

மிகத் திறமையான

**பவர்ஸ்**

**உரங்கள்**

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

**ஏ. பவர்**

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

# நல்லதொரு சமுதாயம் உருவாக உலகெலாம் தமிழ் பரவ வேண்டும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மகிமையில்லை" என்று பாரதியார் சொல்லித்தந்தும் தொடர்ந்தும் அதையே செய்கிறோம். புதிதாக நமக்குள்ளே புது மெருகு ஏற்றிட முயற்சி செய்யவில்லை; புத்தம் புதிய கலைகள் மெத்தவளர்த்திட மெய்வருந்தி உழைக்கவில்லை. இன்று கூட்டத்திற் கூடி நின்று கூடிப் பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளாது நாளை மறந்து விடுகின்றோம்! நாம் தமிழர்; நமது மொழி தமிழ். நமது மொழி வாழ நாமே உழைக்க வேண்டும்; வகை அறிந்து வழி தெரிந்து நாமே வளம் பெருக்க வேண்டும். இந்த உணர்வோடு நாம் செயற்பட வேண்டும். நாம் என்ன செய்வது? என்று பொறுப்பைத் தட்டிக்கழித்து விட முடியாது; ஆனால் பெரும்பாலும் பொறுப்பை வேறு யாராவது ஒருவரின் தலையில் போட்டுவிட்டு விலகிவிடுகிறோம். இந்த உண்மையை நேரில் கண்ட டாக்டர் கமில் ஸ்வலெபில் குறிப்பிட்டிருப்பதாவது: "தமிழர்கள் தமது நேரத்தைப் பெரும்பாலும் எவ்வாறு செலவழிக்கின்றார்கள் என்று என்னை யாராவது கேட்டால்சிறிதும்தயக்கமின்றிநான் கூறுவேன். அவர்கள் பேசிக் கொண்டே காலம் கழிக்கிறார்கள்" என்று. கூட்டங்கள், பேச்சுகள், நிகழ்ச்சிகள், பிரசங்கங்கள், இவை தான் இன்றைய தமிழ் நாட்டில் ஒரு தொற்றுநோய் போல தீராத நோயாக காணப்படுகிறது. இது படுமோசமான நோய், இது மிக விரைவாகப் பரவி வருகிறது.

உங்களது தமிழ் முனிவர் —
"பல சொல்லக் காமுறுவர்
மன்றமா சற்ற
சில சொல்ல தேற்ரு தவர்"

என்று சொல்லியிருந்தும் இப்படி நடக்கிறது.

இதேபோல வேறு தேசங்களிலும் பழமொழிகள் உள்ளன. "பெரிய அரட்டைக்காரனுக்கு விரோதிகளுக்குக் குறைச்சல் இல்லை" என்று சீனப் பழமொழி கூறுகிறது. ஸ்பார்ட்டா நகரத்தார் "ஒரு முட்டாள் வாய்மூடி மௌனியாக இருக்க முடியாது" என்று கூறியுள்ளனர். "குரைக்கிற நாய் கடிக்காது" என்று எங்களிடை ஒரு பழமொழி இருக்கிறது. "அளவுக்கு மீறியபேச்சு இருக்கிற கூடத்தில் மிகக் குறைவான செயல் இருக்கும்" இது முற்றிலும் உண்மை என்பதை மறுப்பதற்கில்லை. ஆயிரக் கணக்கான கூட்டங்களில் அழகான பல திட்டங்களைப் பற்றிச் சொல்லுவார்கள் - ஆனால் ஆக்கத் துறையில் தமிழுக்கு நடந்திருப்பது மிகச் சொற்பமே.

## ஒரு முன் மாதிரி

இத்தனை குறைகளை நல்ல முறையில் நன்மை நாடி எடுத்துக் காட்டியிருக்கும் டாக்டர் கமில் தான் சும்மா இருக்கவில்லை. தன்னை ஒருமுன்மாதிரியாகவேவைத்துக் கொண்டார். அவர் சொல்கிறார் - "தமிழ் மொழியிடத்தில் எனக்குள்ள அவ்வளவு உள்ளன்பின் காரணமாக, அம் மொழியையும், அதன் இலக்கியத்தையும் பயில்வதிலும் என் வாழ்க்கையையே அர்ப்பணித்துள்ளேன். இரவு பகலாக தமிழ் இலக்கியம், பண்பாடு, சரித்திரம ஆகியவற்றைக் கற்பதிலேயே மூழ்கியிருப்பேன். "இதெல்லாம் ரொம்ப சரி; ஆனால் நீங்கள் என்னையும், குழந்தைகளையும் புறக்கணிக்கிறீர்கள். உங்கள் மனதையே அவ்வாறுகொள்ளை கொள்ளுவதற்கு அந்தத் தமிழ் மொழியில் என்ன இருக்கிறது?" "என்று எத்தனை தடவை என் மனைவி என்னிடம் கேட்டிருப்பாள். ஆகவே இது ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியது. அதே சமயத்தில் இயற்கையானது. ஏனெனில் தமிழ்மொழி ஆழ்ந்து, முழுமூச்சுடன் பயிலவேண்டிய அவ்வளவு சிறப்பு வாய்ந்த மொழியாகும்." இதே அடிச்சுவட்டைப் பின்பற்றி அதிகம் பேசாமல் அமைதியாக ஆக்கவேலைகளில் ஊக்கம் காண்பிக்க தமிழ்நாட்டுத் தமிழறிஞர்களும், தமிழ் மன்றங்களும் முன்வந்தால் தமிழ்மொழி விரைவாக வளர்ச்சி அடையும் - அத்தோடு அதன்புகழ் தரணியெல்லாம் தாவிப் பரவும். தமிழ் அறிஞர்களும், தமிழ்மன்றங்களும் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டிய பணியும் உண்டு - தமிழ்மொழியின் வருங்காலம் தமிழ் மக்கள் எப்படிச் செயற்படுகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது புறநானூற்றுச்செய்தி. தவப்பெரும் திரு. குன்றக்குடி அடிகளார் சொன்னது போல "எனக்காகத் தமிழ் அல்ல — தமிழுக்காக நான்" என்ற தூய உணர்ச்சியோடு வாழ்ந்து செயலாற்ற வேண்டும்.

## டாக்டர் கமில் ஸ்வலெபில்

டாக்டர் கமில் ஸ்வலெபில் அவர்களின் "தமிழ் வாழ்க்கையில்" சிலவற்றைக் கவனிப்போம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நெறிக்கு இணங்க தமிழைப் படித்து மகிழ்ந்ததுடன் நின்றுவிடாமல் தன்சொந்த மொழியில் சில மொழிபெயர்ப்புகளையும் செய்திருக்கிறார். பாரதி பாடல், இலங்கைத் தமிழ் கிராமியப் பாடல், திருக்குறள், புதுமைப்பித்தன், விந்தன், தூரன், வல்லிக்கண்ணன் போன்ற எழுத்தாளரின் கதைகள் முதலியவற்றை மொழி பெயர்த்திருக்கிறார். முக்கியமான இரண்டு மொழிபெயர்ப்புகளைக் கவனிப்போம்.

இன்று கதையுலகில் பிரபல்யம் பெற்றுள்ள சிதம்பர ரகுநாதன் எழுதிய "பஞ்சும் பசியும்" என்ற புனைகதையை ஸெக் மொழியில் பெயர்த்தார். அந்த மொழி பெயர்ப்பு (Mllceni Pod Madurou -Ragunadan )முதல் வாரத்தில் மட்டுமே 30,400 பிரதிகள் விற்பனையாகின. மொத்தத்தில் 65,000 பிரதிகள் விற்பனையாகின. இவர் சங்க இலக்கியத் திரட்டு ஒன்றையும் செக் மொழிபெயர்ப்பாக வெளியிட்டார். "மல்லிகை மலர்கள்" என்ற பெயருடன் புறம், அகம், ஐங்குறு நூறு குறுந்தொகை, புறப்பொருள் வெண்பாமாலை, நற்றிணை, கலித்தொகை முதலிய சங்க இலக்கியத் தொகைகளில் இருந்து சில பாடல்களை மொழிபெயர்த்து 1957-ம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

இந்த மொழிபெயர்ப்பு (Kvety Jasminu) இலங்கை நாணய மதிப்பில் 20 ரூபா பெறுமதியானது. இதில் கூட முதல் வாரத்திலேயே பல ஆயிரக் கணக்கான பிரதிகள் விற்பனையாகின. மொத்தம் 30,000 பிரதிகள் விற்பனையாகின. இவர் தமிழ் இலக்கணத்தையும் செக் மொழியில் எழுதியிருக்கிறார். ராஜம் ஐயர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரத்தை" மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார் - சிலப்பதிகாரத்தை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார் - பேச்சுத் தமிழில் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாட்டுத் தமிழ் உட்பட) ஆராய்ச்சி செய்கிறார். (Research in Tamil Dialects) தமிழ் மொழியை நன்கு கற்றுக் கொண்டதால் நேரடியாக இவர் செக் மொழியில் மூலத்திலிருந்தே மொழி பெயர்ப்புகள் செய்கிறார். தமிழ் மொழியை ஆவலுடன் பயின்று கொண்டிருக்கும் ரஷ்யர்களும் விரைவில் தமிழ் இலக்கியங்களை ரஷ்ய மொழியில் மூலத்திலிருந்தே நேரடியாகப் மொழி பெயர்க்கப் போகிறார்கள். தமிழ் தரணி எல்லாம் பரவ மொழி பெயர்ப்புகள் அவசியம் - அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)



டாலிங்டன் அருகிலுள்ள பிரிட்டிஷ் புகையிரத பாடசாலையில், பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. நான்கு இந்தியர்கள் பயிற்சி பெறுவதைப் படத்தில் காண்க.

# இந்தியாவில் மீன் உற்பத்தி

## பெருக்குவதற்கு ஆராய்ச்சி

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு, இந்தியாவில் உணவுத் துறையில் நிலவி வந்த உணவுப் பற்றுக்குறையும், உணவு விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடைய வேண்டுமென்ற ஆர்வமும் நீர்வாழ் ஆதார வசதிகளைப் பெருக்குவதற்குக் காரணமாயின. அதனால், தேசிய அபிவிருத்தித் திட்டங்களில், மீன் பிடிப்புத் தொழிலுக்கும், மீன் வளர்ப்புத் திட்டங்களுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மீன்துறையை அபிவிருத்தி செய்து, பராமரிப்பதற்கு விஞ்ஞான அறிவு இன்றியமையாதது என்று உணரப்பட்டதால், முதலில் பாரக்பூருக்கு அருகில் பழைய ராணுவ கட்டடங்களில் 1957-ல் மத்திய உள்நாட்டு நீர்நிலை மீன்துறை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சி நிலையம், உலகத்திலுள்ள நிலையங்களிலேயே பெரிதாகவும், தீவிர ஆராய்ச்சி நடை பெறும் இடமாகவும் வளர்ந்திருக்கிறது. இதன் நடவடிக்கைகள் நாடு முழுவதும் பரந்திருக்கின்றன. இரண்டாவது திட்ட காலத்தின் போது, இந்நிலையத்தின் தலைமைக் காரியாலயம் பாரக்பூரிலுள்ள கட்டடத்துக்கு இடம் பெயர்ந்தது. இங்கு ஆய்வுக்கூடங்களும், பயிற்சியாளர்கள் தங்கும் விடுதியும், ஸ்டோர்ஸ் கருவிகளைப் பாதுகாக்கும் தனிக் கட்டடமும் இருக்கின்றன. இங்கு சுமார் 275 தொழில் நுட்ப சிப்பந்திகள் பணியாற்றுகின்றனர்.


மீன் துறையை வர்த்தக ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கும், மீன் உற்பத்தியைப் பெருக்குவதறகும், நேரடியான சம்பந்தமுள்ள பல பிரச்சினைகள், இந்த நிலையத்தின் கீழ், நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் திட்ட வேலைகள் மூலமாக ஆராயப் படுகின்றன.

ஒரிஸ்ஸா மீன்வள இலாகாவின் துணையுடன், கட்டாக்கிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலுமுள்ள மீன் பண்ணைகளில் மீன் வளர்ப்பு பற்றிய பின்வரும் விஷயங்களில் ஆராய்ச்சி நடைபெறுகின்றன. இன விருத்திக்கு சாதகமாக இல்லாத சூழ்நிலைகளில் செயற்கை இன விருத்தியை ஊக்குவிப்பது, மீன் பண்ணைகளில் களை எடுப்பு, மீன் உற்பத்தியும், மண் வளமும், இன விருத்தி அதிகமுள்ள இனங்களை வளர்ப்பது முதலியவை முக்கியமான நதிகளிலும் மீன் வள ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவில் துரித அபிவிருத்தியும், தொழில்களும் பெருகி வருவதன் காரணமாக, பாசன வசதிகளுக்காகப் புதிய அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. தண்ணீர் போக்கு வரத்து, ஜல - மின்சார திட்டம், வெள்ளக் கட்டுப்பாடு நடவடிக்கை ஆகியவையும் அதிகரித்துள்ளன. அணைகளால் மீன் துறைக்கு ஏற்படும் பலாபலன்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுத் தண்ணீரும், மீன் வளமும் ஆகிய விஷயங்களும் தனித்தனி நிலையங்களில் ஆராய்சி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையம் பல மகாத்தான சாதனைகளைப் புரிந்துள்ளது. மீன் வளர்ப்புத் துறையில் பொருத்தமான வளர்ப்பு முறைகள் உருவாக்கப்பட்டிருப்பதால் மீன் குஞ்சுகள் மடிவது தடுக்கப்பட்டிருக்கின்றன. தேங்கி நிற்கும் தண்ணீரில் மீன்களுக்கு மருந்து குத்தி வைப்பதன் மூலம் இன வளர்ச்சியைப் பெருக்குவது ஆகியவை இந் நிலைய ஆராய்ச்சிகளில் சில்வாகும். வர்த்தக ரீதியில் மிகவும் உபயோகமுள்ள மீன் இனங்களின் ஜீவசாஸ்திரம் பற்றியும், வளர்ப்பு முறைபற்றி மேலும் பல விஷயங்கள் தெரிய வந்துள்ளன.

இங்கு ஆராய்ச்சி வேலை நடைபெறுவதோடு மீன்வள அபிவிருத்தியிலும் நிர்வாகத்திலும் 12 மாத பயிற்சியளிக்கப் படுகிறது. பல்வேறு ராஜ்யங்களைச் சேர்ந்த அதிகாரிகளும், தூரகிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப் பயிற்சி மூலம் பயனடைந்திருக்கின்றனர்.

பெல்ஜியன்

முள்ளுக் கம்பி

$12\frac{1}{2}$ & 14 அளவு

ஒவ்வொரு கன அங்குலத்துக்கும் 45 தொன் வீத அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமது முள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. ஸ்தாபன கூடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும். s2/w3/24AC

# சிறுவர் பூங்கா

## குழந்தை

....இ. செ. கந்தசாமி....

சின்ன நாய்க்குட்டியுடன் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தான் குழந்தை செந்தி.

"நீரோ, நீரோ" என்று பெருவிரலையும், நடு விரலையும் உரசி நாய்க்குட்டிக்கு ஜாடை காட்டி அங்கும் இங்கும் ஓடினன். ஆனந்த மேலீட்டால் வாலேஆட்டி 'வள், வள்' என்று மெதுவாகக் குரைத்து அவனைத் துரத்தி காலில் நக்குவதும், மேலே பாய்ந்து தொங்குவதுமாக இருந்தது அந்த நாய்க்குட்டி.

இரண்டு கைகளாலும் நாய்க்குட்டியைத் தூக்கி நெஞ்சோடு அழுத்தி அதற்கு முத்தமிட்டான். "என்ரை நீரோ" என்ற செல்லக் குரலில் அதன் வெள்ளை உடலை வருடினன்.

வீட்டு முன் விருந்தையின் ஒரு புறத்திலிருக்கும் தையல் மெஷினில் தைத்தவண்ணமிருந்தாள் புவனேஸ். அந்தந்த அளவுக்கென்று வெட்டிய துணிகளும், மடிந்த துணிகளும், பக்கத்திலிருக்கும் மேசை மேல் கிடந்தன. தையல் மெஷினில் பதிந்திருந்த தன் கவனத்தைத்திருப்பி செந்தியின் துடியாட்டத்தையும்இடையிடையே நோக்கினள்.

நாய்க்குட்டியை தூக்கியபடி படிகளால் மெதுவாக ஏறி, புவனேஸ் தைத்துக்கொண்டிருக்கும் மெஷினின் பக்கத்தில் வந்தான், செந்தி. நூல்கட்டை மின்வேகத்தில் சுழன்று ஆடுவதையும், வளையம் சுழல்வதையும், சட்டையை மடித்து விரலால் ஊசிக்கு நேராகத் தள்ளிவிடும் புவனேஸ்வரியின் கைகளின் அசைவையும் சிறிது நேரம் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றான்.

புவனேஸின் கால்கள் அசைவதைப் பார்த்துவிட்டு தமக்கையின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தான். இலேசாகக் கொஞ்சம் பக்கத்தில் நழுவி ஒரு காலை மெதுவாகத் தூக்கி கால்மிதியில் வைத்து அந்த அசைவுடன் ஒரு கணம் ஆடினன்.

"காலை எடு தம்பி, விழப்போகிருய்."

மெஷின் ஓட்டத்தை நிறுத்திவிட்டு, செந்தியைப் பிடித்து சிறிது அப்பால் நிற்கவிட்டாள் புவனேஸ். அவளின் பிடியுள் சிக்கிக்கிடந்த நாய்க் குட்டி உடலை நெளித்து முனகியது. "சனியன், ஏன் அழுவுருய்" என்று செல்லமாகச் சினந்துகொண்டு கீழே இறக்கி விட்டான். மேசையின் கீழ்க்குறுக்குச் சட்டத்தில் கால்களை வைத்து, மேல் முனையில் கைகளைப் பிடித்துக்கொண்டு, ஆமைபோல கழுத்தைநீட்டிப் பார்த்தான். தைத்த சட்டைகளும் துணிகளும் அதில் விரவிக்கிடந்தன. சிறிது நேரம் விழிகள் அத்துணிகளின் மேலேயே பதிந்திருந்தன.

"அக்கா, எனக்கொரு சட்டை தச்சுத்தா"—ஒரு கையை மேசையின் முனையில் இறுக்கிப் பிடித்துக்கொண்டு, மறு கையால் ஒரு துணியை எடுத்து தமக்கையின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு....

"இங்கே கொண்டுவா, யாரோ தந்த துணி."

"நான்தரமாட்டேன், போ"-தலையை அசைத்து, எட்டிப் போய் முற்றத்தில் நின்றான்.

"கொண்டுவாடா......"

"தரமாட்டேன்,போ"—மீண்டும் மறுத்தான். அந்தத் துணியை இரு பக்க மார்பின் மேற்தோள் சரிவில் வைத்து, கால் முட்ட நிற்கும் கீழ்முனையைக் குனிந்து பார்த்து தனக்கு அழகு பார்த்தான். செந்தியின் பூவிதழில் புன்னகையின் சுடர் வீசி மறைந்தது.

"துணியைக் கொண்டுவாரும் பிள்ளைக்கு வேறைதுணிவாங்கி கால்சட்டை தச்சுத் தாறன்"—செல்லக்குழைந்த குரலில் கெஞ்சினள், புவனேஸ்.

"எனக்குக் கால் சட்டை வேண்டாம்."

"அப்ப என்ன வேணும்?"

"மாமாவின்ரை தங்கச்சி போடுகிற சட்டை போல வேணும்.'

புவனேஸ் கலகலவெனச் சிரித்தாள்.

"எட, பெட்டைச் சட்டையா போடப் போருய்?"

புவனேஸ் மீண்டும் சிரித்தாள்.

"பிள்ளைக்கு ஆம்பிளைச் சட்டை தச்சுததாறன், உந்தத் துணியை அக்கா விட்டைக் குடெடா."

"ஊஹூம்" நான் குடுக்கமாட்டன்"-பிடிவாதம் உசும்பவில்லை.

தமக்கை துணியைப் பறித்துவிடுவாள் என்ற மனப்பிராந்தியில், நெஞ்சோடு அழுத்தி வைத்திருந்தான்.

★

பக்கத்துவீட்டுப் பெண் குழந்தையும் செந்தியும் வீட்டுத் தாழ்வாரத்தில் இருந்து சின்னச் சோறுகறி சமைத்து விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

"நான் ஐயா, நீ அம்மா. நான் வேலைக்குப் போட்டு வாறன்: நீ சோறு காச்சி வைக்கவேணும்."

"ஓம், நான் காச்சி வைக்கிறன."

"நீ போய் காய்கறி வாங்கிக் கொண்டுவா."

"நீயே போய் வாங்கிக்கொண்டுவா."

"இல்லை, நீதான் போக வேணும்."

"நான் போக மாட்டன், நீதான் போ."

சிவப்பு வர்ணத்தில் நீலப் பொட்டிட்ட சட்டை அணிந்திருந்தது பெண் குழந்தை.

அந்தச் சட்டையைக் கண்டதும் செந்திக்கு ஆசை பொங்கி வழிந்தது. வைத்த கண் வாங்காது ஒருகணம் அந்தச் சட்டையிலேயே லயித்துவிட்டான்.

சட்டையைக் கையால் பிடித்து இரு விரல்களால் உரசிப் பார்த்தான். மலர்போன்ற மென்மை பளபளவென்றிருந்தது.

"அச்சாச் சட்டை."

கண்களைக் கீழ்நோக்கித் தன்னைப் பார்த்தான். மேல் சட்டை இல்லை அரையில் கால்சட்டை மாத்திரம் இருந்தது. குனிந்த தலையை நிமிர்த்தி மீண்டும் பெண் குழந்தையின் சட்டையின்மேல் பார்வையை நீட்டினன்.

இன்னொரு முறையும் தன் கால்சட்டையைப் பார்த்துக் கொண்டான்.

"இது கூடாது" — தான் அணிந்திருந்த காற்சட்டையைப் பார்த்து வெறுப்புடன் முனகிக்கொண்டான். அவனுள் அவனைப்பற்றிய ஒரு விசித்திர எண்ணம் நெகிழ்ந்து வட்டமிட்டுச் சுழல்கிறது.

"விர்"ரென ஒன்றும் பேசாமல் ஓடினன். ஓடிய கால்கள் வீட்டுக் கதவோரம் ஓய்வு கண்டது. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

"..........?"

கண்ணைப் பிசைந்து அழுது கொண்டு வெளியே வந்தான்.

"அம்மா, நான் வச்ச துணியை அக்கா எடுத்துப் போட்டா."

"நான் எடுக்கயில்லை"— குசினிக்குள்ளிலிருந்து புவனேஸின் குரல் கேட்டது. அழுது கொண்டு குசினிக்குள் சென்ற செந்தி, "நீதான் எடுத்தனி" என்று அவளின் இரண்டு பின்னலையும் பிடித்து இழுத்தான்.

"சட்டைத் துணியைத்தா... சட்டைத்துணியைத்தா......சட்டைத் துணியைத்தா......"

இரு கைகளையும் பொத்தி புவனேஸின் முதுகில் கும்மினன்.

"அந்தத் துணி சட்டை தச்சுக் குடுத்தாச்சடா, தம்பி."

புவனேஸின் அந்தச் சொல் செந்தியை ஓவென்று குழறியழச் செய்துவிட்டது. சட்டைகள் தைத்து அடுக்கி வைக்கும் அலமாரியண்டைபோய் அதை திறக்கும்படி ஒற்றைக்காலில் நின்றான். அதற்குள் தான் துணி இருக்கும் என்ற சந்தேகம் அவனுக்கு. புவனேஸ்வரியின் தேறுதல் வார்த்தைகள் எதுவும் பலிக்கவில்லை.

அலமாரிக் கதவைத் திறந்தான். சட்டையாகக்கிடந்தது அந்தத் துணி!

"அக்கா அதை எடுத்துத் தா."—அவளின் கையைப்பிடித்து உயரே தூக்கினன்.

தைத்து வைத்திருந்த சட்டையை எடுத்துக் கொடுத்தாள், புவனேஸ்.

அழுகை தேய்ந்து, மகிழ்ச்சி பொங்கி, சிரிப்பு மலர்ந்தது.

"இதைப் போட்டுவிடக்கா."

"இது பெரிய சட்டை, உனக்கு அளவில்லை."

"பெரிசெண்டாலும் போட்டு விடு."

"சின்னச் சட்டை தச்சுத் தாறன். இதை அங்கேவை."

"சின்னச்சட்டை வேண்டாம் இதைப்போட்டுவிடு."

புவனேஸ் போட்டுவிட்டாள். சட்டை சற்றுப் பெருத்துத் 'தொள தொள' வென்றிருந்தது.

பூரணசந்தோஷம் அவன் மனதில். கையால் சட்டையைதடவி முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டான். மீண்டும் தாழ்வாரத்துக்கு ஓடினன். "தங்கச்சி, உன்ரை சட்டை போலை போட்டிருக்கிறன்."

பெண்குழந்தை 'கலீர்' எனச் சிரித்தது.

"பெடியன், பெட்டைச்சட்டை போட்டிருக்கு!"—பெண் குழந்தை, மீண்டும் கையைத்தட்டி சிரித்தது. செந்தி தன்னையும் அவளையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டான்.

பெண் குழந்தை சின்னப் பானைசட்டிகளை எடுத்தது.

"இனி நீதான் அம்மா, நான் ஐயா, இந்தாருமனை சோத்தைக் காச்சும்"

செந்திக்குத் தன்னையறியாத ஒரு வெட்கம் குறுகுறுப்பை உண்டாக்கியது. அவனுடைய சிரிப்பிலும் வெட்கத்தின் சாயல்.

விறுவிறென்று எழுந்து சட்டையைக் கழற்றி உதறி எறிந்தான்.

"எனக்கு வேண்டாம்"—முகத்தில் கோபத்தின் நிழல்!

பானையையும் சட்டியையும் காலால் தட்டினன்.

பெண் குழந்தை அவனுடைய முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தது.

# இன்று போய் நாளை வாரீர்

ஒரு சமயம் ஜான் ரஸ்கின் ஒரு இடத்தில் பேசப்போவதாக அறிவிக்கப்பட்டது. குறித்த தேதியில், பிரசங்கம் நிகழ்த்தும் இடத்தில் சரியான நேரத்தில் மக்கள் கூடி இருந்தனர் ஆனல் திடீரென்று ரஸ்கின் அடுத்த நாள் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது.

அடுத்தநாள் மீண்டும் மக்கள் கூடினர். அன்றும், மறுநாள் தான் ரஸ்கின் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. ஏமாற்றமடைந்த மக்கள் கூட்டம் கலைந்தது.

அதற்கு அடுத்தநாள் கூட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது.

ஜான் ரஸ்கின் அன்று வந்திருந்த கூட்டத்தினரைப் பார்த்து "இதுதான் சரி. போதுமான அளவு வடிகட்டியாகி விட்டது. விடயத்தில் உண்மையான விருப்பம் உள்ளவர்கள் தான் இங்கே அமர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிடத்தில்தான் விடயத்தைக் கூறவேண்டும்" என்று கூறிவிட்டுப் பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

## ஆனு, ஆவன்ன.....

தகப்பனர்:- தம்பி, நீ இன்று ஒன்றையும் பாராது, சிலேற்றில் ஆனு, ஆவன்ன எழுத வேணும்.

மகன்:- (கண்ணை மூடிக் கொண்டு) என்ன அப்பா! கண்ணை மூடிக்கொண்டு எப்படி எழுதுவது?

தகப்பனர்:- .....??

அனுப்பியவர்:

பிரகஸ் ச. மல்லாகம்..

# ஈழப்பாட்டனின் கடிதங்கள்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தகாலத்தின்போதும்பெரிய பிரித்தானிய அரசாங்கத்திற்கும் இலங்கைஅரசாங்கத்திற்குமிடையில் தேயிலை, கொப்பரு, தேங்காய் எண்ணெய், கொக்கோ ஆகிய பல்வேறு ஏற்றுமதிப் பொருள்களுக்கு விலைத்தீர்ப்பு தீர்மானிக்கும் விபரங்களை ஆராய்ந்து சில திட்டமான ஒழுங்குகளும், ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன. டொனமூர் அரசியல் திட்டம் அப்போது அமுலிலிருந்த காலம். வர்த்தக மந்திரியாக இருந்தவர் இராஜா ஹேவவிதாரண. ஒலிவர் குணத்திலக்கா நிதிக்காரியதரிசி என்ற தோரணையில் இந்த ஒழுங்குகள் ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட வகையில் வர்த்தகமந்திரியோடு ஒத்துழைத்து மிக்க சேவை செய்தார். பெரிய பிரித்தானிய அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒழுங்கு ஒப்பந்தங்களின்படி இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப்பொருள்களாகிய தேயிலை, றப்பர், தென்னம் பொருள்களுக்குப் போதியளவு நீதியான பெறுமதி கொடுக்கப்படவில்லை. இவற்றுள் இலங்கையரை அதிகமாகப் பாதித்தது தென்னம் பொருள்களுக்குரிய விலைத்தரிப்புகளே தான். காரணம் தென்னைச் செய்கை இலங்கையர் கையிலும், தேயிலை, றப்பர் செய்கை இலங்கையரல்லாத ஐரோப்பியர் கையிலுமே அதிகமாக இருந்தன. இரண்டாவது உலகமகாயுத்தப் போராட்டம் நிற்பாட்டப்பட்டபின்னர் இந்த ஒப்பந்தத்தை புனராலோசனை செய்யவேண்டுமென்று மந்திரிகுழு மிகவும்ஆவலுடன் செயலிலீடுபட்டது. ஒலிவர் குணத்திலக்கா நேரடியான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென விமானமூலம் லண்டன் போய்ச் சேர்ந்தார். ஒலிவருக்கு அநேகம் உதவியாளர்களும், முக்கிய புத்திபோதனையாளரும் உடன் சென்றனர். இலங்கைப் புள்ளிவிபர இலாக்கா முதல்வரும், திறமையாளருமான வில்லியம்ஸ், துறைமுகத் தீர்வை முக்கிய வசூலிப்பாளர் கிறிஸ்தோபல்ஸ் ஆகிய இருவரும் ஒலிவரின் சுருக்கசாரவிளக்க உத்தியோகத்தருள் முக்கியமானவர்கள். உள்நாட்டு உத்தியோகத்தரின் உதவியும் போதாதென்று வெளிநாட்டு நிபுணர் ஒலிவரை ஆலோசனை கூற ஒலிவர் தேர்ந்தெடுத்தார். அவர் ஓர் ஆங்கில (ஸ்கொச்காரராக இருக்கலாமோ!) பொருளாதாரத் துறைப் பேராசிரியர்.

### விபர அடிப்படையில்

மூலகாரண விபரம், விளக்க விபரம், குறிப்பு விபரம், தொகை விபரம், புள்ளிவிபரம் முழுவதையும் திரட்டி ஆதாரமாகக் காட்டினர்கள். அந்த விபர அடிப்படையில் ஏற்றுமதிப் பொருள்களின் விலை நிர்ணயத்தைப் புனர் ஆலோசனை செய்து கூட்ட வேண்டுமென்று வாதாடினர். ஒன்றிலும் ஒருபலனும் கிட்டவில்லை. விலை விசேடத்தொகைகள் யாவும் உற்பத்தியாளருக்குக் கொடுக்கப்பட வேண்டிய, உற்பத்திச் செலவின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகையாகவே இருந்தன. ஈற்றில் பேச்சுவார்த்தைகள் யாவும் "பரிபூரண தோல்வி" அடைந்தன. ஒலிவரும் தன் மதி நுட்பத்தைத் தீட்டினர். ஒப்பந்தத்தில் ஒரு 'ஓட்டை'யைக் கண்டுபிடித்து விட்டார். ஏற்றுமதிப் பொருள்கள்மீது இலங்கை அரசாங்கம் அறவிடக்கூடிய ஏற்றுமதி வரி சம்பந்தமாக ஒருவிதமான வரையறைகளும் ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை! பின்னர், ஒலிவருக்குச் சொல்லிக்கொடுக்கவாவேண்டும். இலங்கையிலே அவர் ஒரு "நிதிநிலமை மதியூகி" என்று அழைக்கப்படும் அளவுக்குத் திறமையும், மதிப்பும் பெற்றுவிட்டார். ஏற்றுமதித்தீர்வை வரியை உடனடியாக ஏற்றிவிட்டார். ...னைத்து கிட்டியது பேச்சு வார்த்தைகள் மூலம் திருத்தமான பொருத்த மொன்றை உண்டாக்கித் தன் விருப்பத்தை நிறைவேற்ற அவரால் முடியவில்லை. ஆனல் சட்டபூர்வமாக, நிர்வாக ரீதியுள்ளடங்கிய விதிக்கிணங்க நினைத்ததை அவர் சாதித்துவிட்டார். "இரு அரசாங்கங்களுக்குமிடையே இருந்துவந்த 'பெருக்கத்தகை ஒப்பந்தம்' பாதிக்கப்பட்டு "யோக்கியமற்ற செயல்" மூலம் கடந்துசெல்லப்பட்டது. பொருந்திவராதது வருத்தத்துக்குரியது. கைபிழைபாடான சிறு சட்டத்தவறு ஒன்றைக் கையாண்டு தந்திரோபாயமாக நிலமையைக் களவாண்டுகொண்ட செய்கை இதுவாகும்" இவவாறு சம்பந்தப்பட்ட பிரிட்டிஷ் அதிகாரிகள் எண்ணிக் கொண்டனர்.

எனது மறுகடிதத்தில் இந்த ஒப்பந்தத்தின் இன்னுமோர் காட்சியைக் காட்டுவதற்கு உங்களை அழைத்துச் செல்லவிருக்கிறேன்.

என்றும் உங்கள்மேல்
அன்பு நிறைந்த
அப்பா.

## மண்வளம் நீர்வளம் பாதுகாத்தல்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

விடாது, நிலத்தினுட் செல்லவிடுதல் மிகவும் அவசியம். வரம்புகள் கட்டி நீரை ஓடாமல் தடுப்பது இந்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியம். ஒளவைப் பிராட்டியார் 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயர்வான்' என்று கூறிய பொன்மொழிகள் நாட்டின் உயர்ச்சிக்கு நீர் சேமித்தலே மிக முக்கிய காரணமென்பதை வலியுறுத்துகின்றன. ஆதலால் நீர்வளத்துக்கேதுவான. நிலத்தையும் செவ்வனே பாதுகாக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

# உலக விளையாட்டரங்கில் பாஸ்கட் பந்தாட்டம்

## 20 கோடி வீரர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டு

உலகத்திலே மிகவும் ஜனரஞ்சகமான விளையாட்டு எனக் கருதப்படுவது, பாஸ்கட் பந்தாட்டமாகும். பார்வையாளருடைய கோணத்தில் பார்க்கும்பொழுது ஏனைய விளையாட்டுகளிலும்பார்க்க இரண்டு மடங்கு வரவேற்பு இவ்விளையாட்டிற்கு உண்டு.

1891ம் ஆண்டு டாக்டர் நேய்ஸ்மித் என்பவரால் அமெரிக்காவில் ஸ்பிங்வீல்ட் என்ற உடற் பயிற்சிக் கல்லூரியில் கண்டுபிடிக்கப்பட்ட பாஸ்கட் பந்தாட்டமானது, உலகெங்கும் நன்கு பரந்து ஆடுவோரின் மனதையும் ரசிகர்களின் உள்ளத்தையும் கவர்ந்ததால் ஒரு வருடத்தில் 20 கோடிக்கு மேற்பட்ட வீரர்கள் கலந்து கொள்கிறார்கள் என்று நிபுணர்களால் கணிக்கப்பட்டுள்ளது. பனிகாலங்களில் விளையாட்டு வீரர்களை முயற்சியில் ஈடுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட பாஸ்கட் பந்தாட்டமானது வாலிபரின் கவர்ச்சிக்கு ஏற்றதாயிருக்கிறது.

மிகவும் குறுகிய எல்லைக்குள் வேகமாக ஓடி, ஆடி, தாவி விளையாடும் விளையாட்டு இது வேயாம். 40 நிமிடங்கள் மட்டுமே விளையாடும் இவ் விளையாட்டின்போது எத்தனை தடவைவேண்டுமானாலும் விளையாட்டு வீரர்களை மாற்றி மாற்றி விளையாட விதிகளை ஏற்படுத்தியுள்ளனர். ஒரு தடவை ஐவர் பங்கு பற்றினும் ஏழு வீரர்கள் எப்பொழுதும் தயாராக அரங்கத்திலுருப்பர். பல விதிகளுடைய இவ்விளையாட்டை, விதி தவறி விளையாடா வண்ணம் பார்த்துக்கொள்வதற்காக இரண்டு மத்தியஸ்தர்கள் ஆட்டக்காரருடன் ஓடி ஓடிக் கவனிப்பார்கள். இவ்விளையாட்டு உலகத்திலேயே மிகவேகமான விளையாட்டாகும்.

இனி உலக விளையாட்டரங்கத்தில் இவ்விளையாட்டானது எப்படி இருக்கிறது என்பதை கவனிப்போம். ஒலிம்பிக் விளையாட்டில் அன்று தொட்டு இன்றுவரை முன்னணியில் நிற்பது அமெரிக்காவேயாம். 1956ம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ரசிகர்கள் அனைவரும் ரஷ்யா அமெரிக்காவை தோற்கடித்துவிடும் என்று நம்பியிருந்தனர். ஆனால் அமெரிக்காவே ரஷ்யாவுடன் ஆடிய இரண்டு ஆட்டங்களிலும் 85—55, 89—55 புள்ளிகளை எடுத்துத் தோற்கடித்தது. அமெரிக்கா அதிக புள்ளிகளைப் போடாவண்ணம் ஆட்டத்தின் வேகத்தைக்குறைத்து ரஷ்யா தன்மானத்தை இரண்டாவது ஆட்டத்தின்போது காப்பாற்றியது.

கீழைத்தேச நாடாகிய ஜப்பான் ஒன்றே அமெரிக்காவிற்கு போட்டிகொடுத்தது. விளையாட்டு ஆரம்பமாகி முதல் 13 நிமிடங்களுக்கு ஜப்பான் அமெரிக்காவிலும் பார்க்க அதிக புள்ளிகளைப் போட்டது. இருப்பினும் ஆட்டம் முடியும் வேளை அமெரிக்காவே98புள்ளிகளைப்போட்டு வென்றது. ஜப்பானிற்கு 40 புள்ளிகள் மட்டுமே கிடைத்தது.

ஆசியாவிலே இவ்விளையாட்டிலே முன்னணியில் நிற்பது பிலிப்பைன் தீவினரே. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இவர்களை இதுவரை எந்த ஆசியநாடாகிலும் தோற்கடிக்கவில்லை. அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற நான்முனை விளையாட்டுப் போட்டியில் இலங்கையும் கலந்துகொண்டது. இப்போட்டியில் ஈரான் தேசம் வெற்றிபெற்றது. இந்தியா இரண்டாவது ஸ்தானத்தையும் பாகிஸ்தான் மூன்ருவது ஸ்தானத்தையும் பெற்றது.

—

## இந்திரா காந்தி காங்கிரஸ் தலைவர்?

புதுடில்லி, சனி

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்தியப் பிரதமர் நேருவின் மகள் திருமதி இந்திரா காந்தி தேர்ந்து எடுக்கப்படுவாரெனத் தெரிகிறது.

காங்கிரஸ் கட்சித் தலைவராகப் பதவிவகித்துவரும் திரு சஞ்சீவி ரெட்டி ஆந்திர முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அமெரிக்கச் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு திருமதி இந்திரா, இந்தியா திரும்பியதும் பதவி ஏற்கக் கூடுமெனச் சொல்லப்படுகிறது. இந்திரா இதற்கு இணக்கம் தெரிவிக்காவிடில் திரு. 'அதுல்யா கோஷ்' தலைவராகலாமெனத் தெரிகிறது.

—

## பாணவிடை சிவாலய உற்சவம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு — பாணவிடை பார்வதி வர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வர சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 20ம்திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 10 நாட்களுக்கு நடைபெறவிருக்கிறது.

28-ம் திகதி நடைபெறும் தேர்திருவிழாவை அடுத்து தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

# விண்வெளிப் பயணம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுவதற்குத் தான் விண்வெளி விமானிகள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். விமானி கையால் தமது கப்பலை இயக்கிக் கட்டுப்படுத் முடியாமல் போனால், தானே இயங்கும் ஏற்பாடுகளால் அதைக் கட்டுப்படுத்தி இயக்க முடியும்.

ஆகவே, ஜான் கிளன் சென்ற கப்பலைப் போல் மூன்று சுற்றுச் சுற்றி இறங்கப் போகும் கப்பல்களில் சிற்சில மாறுதல்களே இருக்கும்.

அவர் தாம் ஒரு தடவை உலகை மும்முறை சுற்றி வந்து இறங்கி விட்டாரே, இன்னும் ஏன் மூன்று தடவை இதே போன்ற விண்வெளிப் பயணங்களை நடத்த வேண்டும் என்றால், விண்வெளிப் பயணம் மனிதனின் மன நிலையையும் உடல் நிலையையும் எவ்வாறு பாதிக்கும் என்று மேற்கொண்டு ஆராய்வதற்காகும்.

ஒருவர் விண்வெளியில் உலகத்தைச் சுற்றும்போது நெடுநேரம் எடையில்லாத நிலையில் இருப்பார். இந்த நிலை தமக்கு மிகவும் இனிமையாக இருந்தது என்கிறார் ஜான் கிளன். மற்றவர்களுக்கு அது எப்படியிருக்குமோ?

### இரட்டையர் திட்டம்

இன்னும் நான்கு முறை தனி ஆள் விண்வெளிப் பயணங்களை நடத்துவதால், அடுத்தபடி இரண்டு ஆட்கள் செல்லும் விண்வெளிப் பயணத் திட்டதுக்கு வேண்டிய பல தகவல்கள் கிடைக்கும். இரண்டு பேர் ஒரே கப்பலில் செல்லும் அத் திட்டத்துக்கு ஜெமினித் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். 1963 நடுப்பகுதியில் ஜெமினித் திட்டம் ஆரம்பமாகும். அத் திட்டத்தின்படி இறுதியில் இரண்டு விண்வெளி விமானிகள் ஒரு வாரம் வரை விண்வெளியில் இருப்பார்கள்.

தனி ஆள் செல்லும் விண்வெளித் திட்டத்தின் பெயர் மெர்க்குரித் திட்டம் என்பது. மெர்க்குரித் திட்டத்து விண்வெளிக் கப்பலை விட ஜெமினித் திட்டத்துக் கப்பல் பெரிதாகவும் கனமாகவும் இருக்கும்.

விண்வெளிக் கப்பலின் பாகங்களைத் தனித் தனியாக விண்வெளியில் உலகத்தைச் சுற்றி வரும் பாதைக்கு அனுப்பி, அவற்றை இணைத்துப் பொருத்த முடியுமா என்று ஆராய்கிறார்கள். அதற்கு ஜெமினித் திட்டம் உதவி செய்யும்.

### அந்தரத்தில் கட்டல்

இந் நடுவழி இணைப்பு வேலை நடைபெற முடியுமானால், அமெரிக்கர் சந்திரனில் போய் இறங்கப் போகும் நாளும் அண்மையில் நெருங்கி வரும். தற்போதுள்ள திட்டப்படி அவர்கள் 1970-ம் ஆண்டு தான் சந்திரனில் இறங்க முடியும். சந்திரனுக்குச் செல்லும் விண்வெளிக் கப்பலின் பாகங்களைத் தனித் தனியே "சனி" என்னும் ஏவுகணை விண்வெளிக்குச் செலுத்த வேண்டும்; அங்கு அவற்றை இணைத்துச் சேர்த்து, அங்கிருந்து மேலே சந்திரனுக்கு ஏவ வேண்டும் என்று முயற்சி செய்கிர்கள். இது நடக்காது என்றால், சந்திரனுக்கு நேரடியாக மனிதனை அனுப்பச் "சனி" யை விடப் பலமடங்கு ஆற்றல் வாய்ந்த மாபெரும் ஏவுகணை தேவைப்படும். அதற்குத்தான் "நோவா" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால் சனி ஏவுகணையை உருவாக்கும் வேலைதான் மும்முரமாக நடக்கிறது. அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் பின்னதாகவே "நோவா" வேலை தொடங்கப்பட்டுள்ளது.

மூன்று பேர் ஒன்றாகச் சென்று சந்திரனில் இறங்கும் திட்டத்திற்கு "அப்பாலோ" திட்டம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். முதலில் 1964-ல் இத் திட்டத்தின்படி விண்வெளி விமானிகள் மூவர் பூமியை வலம் வரத்தொடங்குவர். பின்னர் அவர்கள் சந்திரனைச் சுற்றி விட்டுப் பூமியில் வந்து இறங்குவர். 1968-70-ல் சந்திரனிலேயே இறங்கிப் பார்த்துவிட்டு மீள்வர்.

சந்திரனையும் கடந்து சுக்கிரன், செவ்வாய் ஆகிய கோள்களுக்கு மனிதன் சென்று வர உதவியாக இருக்க வேண்டும் என்று தான் தற்போது "நோவா" ஏவுகணைக்கு வேண்டிய வேலைகள் நடக்கின்றன.

# பாஸ்கட் பந்தாட்டப் பயிற்சி வகுப்புகள்

அகில இலங்கை கல்லூரிகளின் பாஸ்கட் பந்தாட்டச் சங்கமானது, தனது இறுதிப் போட்டியை யாழ்ப்பாணத்தில் நடத்தியது யாவரும் அறிந்ததே. இதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இவ்விளையாட்டை பரப்புவதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிவகுப்புகளை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஏப்ரல் 15ம் திகதியிலுருந்து 20ந் திகதிவரை நடத்த முன்வந்திருக்கிறது. இப்பயிற்சி வகுப்பில் 20க்கு மேற்பட்ட யாழ்ப்பாண ஆசிரியர்கள் கலந்துகொள்வதுடன் விளையாட்டு நுணுக்கங்களைத் தெரிந்து கொளவார்கள்.

பயிற்சிவகுப்புகள் திரு. ஆர். ஜே. துரைராஜா மேற்பார்வையில் நடைபெறும். பிரதம பயிற்சியாளராய் திரு. இராம். சுந்தரலிங்கம் கடமையாற்றுவார். இவர் கல்லூரிகள் சங்கத்தின் காரியதரிசியும் சென். பெனடிக்ற் கல்லூரி (சம்பியன்) பயிற்சியாளருமாவர். இவருக்குதவியாக திருவாளர்கள் எஸ். நடராஜாவும் எஸ். கதிர்காமத்தம்பியும் கடமையாற்றுவர்.

15ம் திகதி காலை 6 மணிக்கு வடமாகாண உதவி கல்வி அதிகாரியினால் இவ் வகுப்புகள் தொடங்கிவைக்கப்படும்.

## ஆலய பரிபாலன சபை வருடாந்தக் கூட்டம்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் 5-வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 20ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும்.

கி. ச. அங்கத்தவர் திரு கு. வைரமுத்து தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருப்பணி பற்றிய பல்வேறு விஷயங்கள் ஆலோசிக்கப்படவிருக்கின்றன. திரு. மு. மயில்வாகனம், திருமதி தி. திலகவதி, திரு. தில்லைநாதப்புலவர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்த ஏற்பாடாகி வருகிறது.

—

## அண்ணாத்துரை செவ்வாயன்று பதவிப்பிரமாணம்


சென்னை, சனி

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரை வருகிற செவ்வாய்க்கிழமை டெல்லி மேல் சட்ட சபை மெம்பராகப் பதவி ஏற்பார். திரு. அண்ணாத்துரை திங்கட்கிழமை டில்லிக்குப் புறப்பட்டுச்செல்கிறார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| கெப்பிட்டல் (கொழும்பு) | சபையர் (வெள்ளவத்தை) | விஜயா (மட்டக்களப்பு) |
| வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) | | வெம்பிளி (கண்டி) |
| ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை) | மொடர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்தனபுரி) |
| விஜிதா (மஸ்கெலியா) | தீவொளி (நுவரெலியா) | ஜெமினி (ராகல) |

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்பண்ணை மேலை வீதி, 63-ம இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.